ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் பக்கம் 3

அருளுக்குரிய கிலாஃபத்தின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றங்கள் பக்கம் 9

இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் சமூக நல்லொழுக்க வீழ்ச்சியைத் தடுத்தல் பக்கம் 11

நீங்கள் ஒரு சிறந்த நேரத்தில் ஒரு சிறந்த நோக்கத்திற்காகப் பிறந்துள்ளீர்கள்! (தொடர்ச்சி...) பக்கம் 18



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | August 2025 | Vol. 4 - Issue No. 9



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311


## யு.கே ஆண்டு மாநாடு - 2025

(அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கொடியேற்றி துஆ செய்யும் காட்சி)





# திருக்குர்ஆன்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱذْكُرُوا۟ ٱللَّهَ ذِكْرًا كَثِيرًا ﴿٤٢﴾

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை மிக அதிகமாக நினைவு கூருங்கள். (33:42)



# ஹதீஸ்


وعنه وعن أبي سعيد رضي الله عنهما قالا:
قال رسول الله صلى الله عليه وسلم:
"لا يقعد قوم يذكرون الله عز وجل
إلا حفتهم الملائكة، وغشيتهم الرحمة
ونزلت عليهم السكينة، وذكرهم
الله فيمن عنده"

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களின் ஒரு கூட்டம் அல்லாஹ்வை நினைவு கூர்வதற்காக ஒன்றுகூடும்போது வானவர்கள் (தமது இறக்கைகளைக் கொண்டு) அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றனர். (இறை) கருணை அவர்களைச் சூழ்ந்து கொள்கிறது. அமைதி அவர்கள் மீது இறங்குகிறது. அல்லாஹ் தனக்கு நெருக்கமானவர்களிடம் அவர்களைக் குறித்து எடுத்துக் கூறுகிறான். (முஸ்லிம் – ரியாழுஸ்ஸாலிஹீன் 1446)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர்

**மதிப்பிற்குரிய முஹம்மத் இனாம் கோரீ சாஹிப் (நாஸிர் அஃலா காதியான்)**

*தமிழாக்கம்: இப்னு வஸீம்*



அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَاللّٰهُ غَفُورٌ رَّحِيمٌ

இந்த வசனங்களின் பொருள்: முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களே! மக்களிடம் இவ்வாறு அறிவித்து விடுவீராக! நீங்கள் அல்லாஹ்வின் நேசத்தைப் பெற விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள். அப்போது அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை மன்னித்து விடுவான். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான். (சூரா ஆல இம்ரான்:32)

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ

وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا ؕ

ذٰلِكَ الْفَضْلُ مِنَ اللّٰهِ ؕ وَكَفٰى بِاللّٰهِ عَلِيْمًا

அல்லாஹ்வுக்கும் இத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டும், கீழ்படிந்தும் நடப்பவர்களே! அல்லாஹ் அருள்புரிந்தவர்களான நபிமார்கள், சித்தீக்குகள் (உண்மையாளர்கள்). ஷஹீதுகள், மற்றும் சாலிஹ்கள் (நல்லடியார்கள்) ஆகியோரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மேலும், இத்தகையோர் மிகவும் நல்ல தோழர்களாவர். இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்துள்ள சிறப்பான அருளாகும். மேலும், அல்லாஹ் நன்கு அறிபவன் என்ற வகையில் முற்றிலும் போதுமானவன் ஆவான். (சூரா அந்நிஸா:70,71)

இந்த வசனங்களில், நீங்கள் அல்லாஹ்வின் நேசத்தைப் பெற விரும்பினால், ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவது கட்டயாமாகும் என்ற நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. பிறகு, அல்லாஹ்வின் நேசம் கிடைத்து விட்டதற்கான அடையாளங்கள் என்னவாக இருக்கும்?

அதைப் பற்றி கூறுகிறான்: இத்தகைய மக்களில் நல்லடியார்கள் எனும் தரத்தைப் பெற்ற மக்கள் இருப்பார்கள். ஷஹீதுகள் எனும் தரத்தைப் பெற்ற மக்கள் தோன்றுவார்கள். உண்மையாளர்கள் என்ற தரத்தைப் பெற்ற மக்கள் தோன்றுவார்கள். பிறகு, எத்தகைய மேன்மை மிக்கவர்களும் தோன்றுவார்கள் என்றால், அவர்களுக்கு நபித்துவம் எனும் அருட்கொடையும் வழங்கப்படும். மேலும், நபித்துவத்தின் சிறப்புகளிலிருந்து அவர்கள் பங்கு பெறுபவர்களாக இருப்பார்கள்.

இந்த சுருக்கமான முன்னுரைக்குப் பிறகு, வாருங்கள்! இப்பொழுது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்கள் தம் எஜமானரும் பின்பற்றுவதற்கு உரியவரும் ஆன ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த முன்னுதாரணமான நேசம் மற்றும் அன்னாருக்கு முழுமையான கட்டுப்படுதல் ஆகியவற்றுக்குத் தம் சொல், செயல் மற்றும் நிலை ஆகியவற்றின் பங்களிப்பின் மூலமாக என்ன முன்மாதிரியைக் காட்டினார்கள் என்று பார்ப்போம்!

ஹுஸூர் (அலை) அவர்களின் நூல்கள், கவிதைகள், உரைநடைகள் ஆகியவற்றின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பு, நேசம் குறித்து அன்னாரது உள்ளத்து உணர்வுகள் வெளிப்படுவதைப் பொறுத்தவரையில், அது ஹுஸூர் (அலை) அவர்களுடைய 80-க்கும் மேற்பட்ட நூல்களில் பரவிக் கிடைக்கிறது.

நான் நேரத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு சில மாதிரிகளை மட்டும் முன் வைக்கிறேன்: தமது .ஃபார்ஸீ கவிதைகளில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

عجب نوریست در جانِ محمدؐ — عجب لعلیست در کانِ محمدؐ
اگر خواہی دلیلے عاشقش باش — محمدؐ ہست برہانِ محمدؐ
سرے دارم فدائے خاکِ احمدؐ — دلم ہر وقت قربانِ محمدؐ
دگر اُستاد را نامے ندانم — کہ خواندم در دبستانِ محمدؐ

பொருள்: முஹம்மத் (ஸல்) அவர்களின் இயல்பில் இறைவன் வியத்தகு ஒளியை வைத்துள்ளான். மேலும், பெருமானார் (ஸல்) அவர்களின் இயல்பு விந்தைக்குரிய ரத்தினங்களால் நிறைந்துள்ளது.

எனவே, நிராகரிப்பாளர்களே! நீங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்துக்கு சான்றை எதிர்ப்பார்க்கிறீர்களா? சான்றுகளோ ஏராளமாக உள்ளன. ஆனால், சுருக்கமான வழி யாதெனில், அன்னாரை நேசிப்பவர்களில் இணைந்து விடுங்கள். ஏனெனில், முஹம்மத் (ஸல்) அவர்களின் இருப்பு அவர்களின் உண்மைத்துவத்துக்கான மிகப் பெரும் சான்றாகும்.

எனது தலை அஹ்மத் (ஸல்) அவர்களின் காலடி மண்ணில் அர்ப்பணமாகிறது. மேலும், எனதுள்ளம் எந்நேரமும் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அர்ப்பணமாகியுள்ளது.

எனக்கு வேறு எந்த ஆசிரியர் பெயரும் தெரியாது. நானோ முஹம்மத் (ஸல்) அவர்களின் பள்ளிக்கூடத்திலேயே படித்துள்ளேன்.

இவ்வாறே பிறிதோர் ஃபார்ஸீ கவிதையில் கூறுகிறார்கள்:

بعد از خُدا بعشق محمد مخمرم    گر کفر این بَوَد بخُدا سخت کافرم

அதாவது, இறைவனுக்குப் பிறகு நான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதான அளப்பரிய நேசத்தில் திளைத்துள்ளேன். இந்த அளப்பரிய நேசம்தான் குஃப்ர் என்றால், (நிராகரிப்பு என்றால்) இறைவன் மீது ஆணையாக! நான் எல்லாரையும் விடப் பெரிய காஃபிர் ஆவேன்.

பிறகு, தமது அரபு கஸீதாவில் (அரபுக் கவிதையில்) கூறுகிறார்கள்:

أُنْظُرْ إِلَيَّ بِرَحْمَةٍ وَّتَحَنُّنٍ    يَا سَيِّدِي أَنَا أَحْقَرُ الْغِلْمَانِ
يَا حِبِّ إِنَّكَ قَدْ دَخَلْتَ مَحَبَّةً    فِي مُهْجَتِي وَمَدَارِكِي وَجَنَانِ
مِنْ ذِكْرِ وَجْهِكَ يَا حَدِيقَةَ بَهْجَتِي    لَمْ أَخْلُ فِي لَحْظٍ وَّلَا فِي آنِ

பொருள்: நீர் கருணையுடனும் பரிவுடனும் என் மீது பார்வையை செலுத்துவீராக. என் எஜமானரே! நான் ஓர் அற்பமான அடியான் ஆவேன்.

என் அன்பிற்குரியவரே! நீர் அன்பெனும் வழியில் எனது உயிர், என்னுடைய புலன்கள் மற்றும் எனது உள்ளம் ஆகியவற்றில் நுழைந்து விட்டீர்.

எனது மகிழ்ச்சியின் தோட்டமே! உமது முகத்தின் நினைவை விட்டும் நான் ஒரு கணமேனும் ஒரு நொடியேனும் விலகியிருக்கவில்லை.

பிறகு, தமது உருதுக் கவிதைகளில் தமது அளவு கடந்த நேசம் மற்றும் மாய்த்துக் கொள்ளும் உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்கள்: (வோ பேஷ்வா ஹமாரா... பொருள்: அவரே நம் தலைவர்! ஒளியனைத்தும் அவரிடமிருந்தே கிடைக்கின்றன. அவரது பெயர் முஹம்மத் (ஸல்) ஆகும். என் உள்ளம் கவர்ந்தவர் அவரே! அந்த ஒளியில் நான் என்னை மாய்த்துக் கொள்கிறேன். அவருக்காகவே நான் ஆகியுள்ளேன். அவருக்கு முன் நான் ஒரு பொருட்டல்ல. இதுவே தீர்ப்பு.

இன்னொரு கவிதையில் கூறுகிறார்கள்: அஹ்மத் (ஸல்) அவர்களின் மேன்மை நமது சிந்தனையையும், கற்பனையையும் விட மேலானது. அவர்களின் அடியாரைப் பாருங்கள்! காலத்தின் மஸீஹாக இருக்கிறார். (உருது துர்ரே ஸமீன்)

இப்பொழுது ஹுஸூர் (அலை) அவர்களின் உரைநடை கூற்றுகளி-லிருந்து சில மேற்கோள்களை முன் வைக்கிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதருக்கு அருளப் பெற்ற, அதாவது, முழுமையான மனிதருக்கு அருளப்பெற்ற உயர்த் தகுதியுடைய அந்த ஒளி வானவர்-களில் இருக்கவில்லை. விண்மீன்-களில் இருக்கவில்லை. சந்திரனில் இருக்கவில்லை. சூரியனிலும் இருக்கவில்லை. அது பூமியிலுள்ள கடல்கள், ஆறுகள் ஆகியவற்றிலும் இருக்கவில்லை. அது மாணிக்கம், நீலமணி, மரகதம், வைரம், முத்து ஆகியவற்றிலும் இருக்கவில்லை.

அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருக்கவில்லை. அது மனிதரிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதரிடம். அதன் நிறைவு, முழுமை, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் எஜமானரும், நபிமார்களின் தலைவரும், உயிரினங்களில் தலைசிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களேஆவார்கள். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ருஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 160-162)

நாம் நேர்மையுடன் பார்க்கும்போது நபித்துவ தொடரில் மிக உயர்த்தகுதியுடைய, துணிச்சல் மிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் பேரன்பிற்குரிய நபியாகவும் ஒரே ஒருவரை மட்டுமே காண்கிறோம். அவர் நபிமார்களின் தலைவரும், இறைதூதர்களில் மிகப் பெருமைக்-குரியவரும், (இறைவனால்) அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். அவர்களின் நிழலின் கீழ் 10 நாள்கள் நடப்பதனால், எத்தகைய ஒளி கிடைக்கிறதுஎன்றால், அது இதற்கு முன்பு ஆயிரம் ஆண்டுகள் வரைகூட கிடைக்க முடியாமல் இருந்தது." (சிராஜே முனீர். ருஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 82)

இப்பொழுது நான் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைத்தொண்டர், உண்மைப்பேரன்பர், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் நன்னடத்தை மற்றும் குணாதிசயங்களுக்கான சில எடுத்துக்காட்டுகளை முன்வைக்கிறேன்: இமாம் மஹ்தி (அலை) அவர்களின் புதல்வர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்கள் மாநபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அளப்பரிய பேரன்பு தொடர்பாக 1960 ரப்வா ஆண்டு மாநாட்டில் சொற்பொழி-வாற்றும்போது இவ்வாறு கூறினார்கள்:



“இந்த எளியவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்லத்தில் பிறந்தேன். இது இறைவனின் ஒரு மாபெரும் அருட்கொடையாகும். நான் அந்த விண்ணின் எஜமானனையே முன்னால் இருப்பவனாகவும் நம்மைப் பார்ப்பவனாகவும் அறிந்து கூறுகிறேன், பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றிக்கூறும்போது, அவ்வளவு ஏன், அன்னாரது பெயரை மட்டும் எடுக்கும்போதுகூட, ஒருபோதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்



கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுக்காமல் இருந்து நான் பார்த்ததே இல்லை. ஹுஸுர் (அலை) அவர்களின் உள்ளம் மற்றும் சிந்தனை, ஏன்! முழு உடலின் நாடி, நரம்புகளும் தம் எஜமானர், அகில உலகங்களின் தலைவர், படைப்பினங்களின் பெருமிதம் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் மீதான அளப்பரிய நேசத்தில் திளைத்திருந்தது.”

இதன் தொடர்ச்சியாகவே பேரன்பின் இன்னொரு நிகழ்வைக் கேட்டுக் கொள்ளுங்கள்: உலகில் மிகவும் அன்பிற்குரியவர்கள் இறந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களின் உற்றார், உறவினர் சில நாள்கள் வரை அல்லது சில மாதங்கள் வரை அவர்களை நினைத்துப் பார்த்து தமது உள்ளங்களில் வேதனையை உணர்கிறார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய அன்பிற்குரியவ-ராகவும், நேசத்திற்குரியவராகவும் இருக்கிறார்கள்! அன்னார் மறைந்து 14 நூற்றாண்டுகள் எனும் நீண்ட காலம் கழிந்து விட்டது. ஆனால், இன்றும்கூட அன்னாரின் ஓர் உண்மைப் பேரன்பர் உயிரை உருக்கி விடும் அந்த நிகழ்வைக் கற்பனை செய்து நிம்மதியிழந்து கண்ணீர்விட்டு அழுது கொண்டே செல்கிறார். மேலும், தனிமையில் தம் அன்பிற்குரியவரின் இன்னொரு நேசர் ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் சாபித் (ரலி) அவர்களின் இந்தக் கவிதைகளை மெல்லிய குரலில் கூறிக் கொண்டே இருக்கிறார்:

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِى فَعَمِىَ عَلَيْكَ النَّاظِرُ    مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

அதாவது, என் அன்பரே! நீர் என் கருவிழியாக இருந்தீர். அது இன்று நீர் வ.ஃபாத் ஆனதனால் குருடாகி விட்டது. இப்பொழுது உமக்குப் பிறகு எவர் வேண்டுமானாலும் இறக்கட்டும்! எனக்கோ உமது வ.ஃபாத்தைப் பற்றிய அச்சம் மட்டுமே இருந்தது. அது நடந்து விட்டது.

அறிவிப்பாளர் (ஹஸ்ரத் பீர் சிராஜுல் ஹக் சாஹிப் நு.ஃமானீ (ரலி) அவர்கள்) கூறுகிறார்கள்: “நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை முபாரக் பள்ளிவாசலில் தனியாக உலாவியவாறு, கண்ணீர் விட்டு அழுவதைக் கண்டபோது பதறிப்போய், ‘ஹஸ்ரத்! இது என்ன விவகாரம்! ஹுஸுருக்கு என்ன துன்பம் நேர்ந்ததோ?’ என்று பணிவுடன் கேட்டேன். ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ‘நான் இப்பொழுது ஹஸ்ஸான் பின் .ஃசாபித் (ரலி) அவர்களின் இந்தக் கவிதையைப் படித்துக் கொண்டிருந்தேன். எனதுள்ளத்தில், இந்தக் கவிதை எனது நாவிலிருந்து வந்திருக்கலாமே!’ என்ற ஏக்கம் ஏற்பட்டது.”

ஆக, பாருங்கள்! சிந்தியுங்கள்! இது எத்தகைய தூய்மையான பேரன்பாக இருக்கிறது! தம் அன்பர் (ஸல்) அவர்களது நினைவு, 1400 ஆண்டுகள் முன் இறந்துபோன ஒரு நபிநேசரின் கூற்றையும் உயிர்ப்பித்து விட்டது....

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் (அலை) அவர்கள் மீது அன்னார் ஹஜ் செய்யவில்லை என்ற ஓர் ஆட்சேபனையும் செய்யப்படுகிறது. முதல் விஷயம், இஸ்லாத்தின் தூண்களில் கலிமா, தொழுகை, நோன்பு மற்றும் ஸகாத் ஆகியவற்றுக்குப் பிறகு, ஐந்தாவது தூண் ஹஜ் எனும் இபாதத் ஆகும். மேலும், அதற்குப் பல நிபந்தனைகள் உள்ளன. அதாவது, அந்தப் பயணத்தை மேற்கொள்வதற்கான ஆற்றல் இருக்க வேண்டும். வழிப்பாதை அமைதி நிறைந்ததாக இருக்க வேண்டும் முதலியவை. இந்த நிபந்தனைகள் முழுமையடையாத வரை ஹஜ் கடமையாவதே இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு, ஒன்று வழிப்பாதையின் அமைதி இல்லாமல் இருந்தது. மறுபுறம் அல்லாஹ் எத்தகைய மகத்துவமிக்க பணிகளை அன்னாரிடம் ஒப்படைத்திருந்தான் என்றால், அவை ஹஜ்ஜைக் காட்டிலும் அதிகம் முன்னுரிமை வாய்ந்தவையாக இருந்தன. உண்மையில், உள்ளத்தின் நிலையைப் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளத்தின் நிலையோ எப்படி இருந்தெனில் என்றால், அதை ஹுஸுர் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறி விட்டார்கள்:

جِسْمِى يَطِيرُ إِلَيْكَ مِنْ شَوْقٍ عَلَا    يَا لَيْتَ كَانَتْ قُوَّةُ الطَّيَرَانِ

பொருள்: என் அன்பரே! எனது உடலோ பேரன்பு மிகுதியால் உம்மை நோக்கி பறக்க விரும்புகிறது. அந்தோ! எனக்குப் பறக்கும் ஆற்றல் இருந்திருந்திருக்கக்கூடாதா?!

இது குறித்தே ஹுஸுர் (அலை) அவர்களின் புதல்வர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை முன் வைக்கிறேன். அவர்கள் கூறுகிறார்கள்:

“ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு சற்று உடல்நலக்குறைவு ஏற்பட்டிருந்தது. அன்னார் வீட்டில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார்கள். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் மற்றும் எங்கள் நானா ஜான் (தாய் வழிப்பாட்டனார்) மர்ஹூம் ஹஸ்ரத் மீர் நாஸிர்

நவாப் சாஹிப் (ரலி) அவர்களும் அருகில் அமர்ந்திருந் -தார்கள். அப்பொழுது ஹஜ் பற்றிய பேச்சு ஆரம்பமாகி விட்டது. ஹஸ்ரத் நானா ஜான் அவர்கள், இப்பொழுதோ ஹஜ்ஜுக்காகப் பயணம் மற்றும் வழிப்பாதை முதலியவற்றின் வசதி உருவாகிறது, ஹஜ்ஜுக்கு செல்ல வேண்டும் என்ற ஒரு விஷயத்தைக் கூறி விட்டார்கள்.

அப்பொழுது இரு புனித இடங்களை (மக்கா, மதீனாவை) தரிசிப்பதைக் கற்பனை செய்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கண்களில் கண்ணீர் ததும்பியிருந்தன. மேலும், ஹுஸூர் (அலை) அவர்கள் தமது கை விரலால் தமது கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சென்றார்கள். ஹஸ்ரத் நானா ஜான் அவர்கள் கூறியதைக் கேட்டு ஹுஸூர் (அலை) அவர்கள், இதுசரிதான்! எமக்கும் மனமார ஆசை இருக்கிறது. ஆனால், என்னால் மாநபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய மண்ணறையைப் பார்க்கவும் முடியுமா என்று நான் யோசித்துப் பார்க்கிறேன்! என்று கூறினார்கள்.

வெளிப்படையில் பார்க்க இது முழுக்க முழுக்க வீட்டு சூழலின் சிறிய விஷயமாகும். ஆனால், ஆழ்ந்து கவனம் செலுத்தினால், இதில் ஆழ்கடலின் பொங்கி எழும் அலைகள் விளை -யாடுவது தெரிகிறது. அது மாநபி (ஸல்) அவர்கள் மீதான பேரன்பில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தூய இதயத்தில் அலை மோதியது. எந்த உண்மையான முஸ்லிமுக்குத் தான் ஹஜ் செய்ய ஆசை இருக்காது! ஆனால், இந்த இயல்பின் முடிவில்லா நேசத்தைக் கணித்துப் பாருங்கள்! அன்னாரது ஆன்மா ஹஜ் பற்றிய கற்பனையில் பட்டாம்பூச்சியாக பெருமானார் (ஸல்) அவர்களின் தூய மண்ணறையை சென்றடைந்து விடு -கிறது. மேலும், அங்கு அன்னாருடைய கண்கள் இந்தக் காட்சியைத் தாங்க முடியாமல் மூடத் துவங்கி விடுகின்றன. (1960 ரப்வா ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு)




இந்த நபி நேசர் அவர்களின் தூய உள்ளத்து உணர்வுகளுக்கு அல்லாஹ்வின் பார்வையில் என்ன மதிப்பும், பொருமதியும் உள்ளது என்பதை, உணர்வுத்திறன் கொண்ட ஓர் உள்ளத்தைத் தம்முடைய நெஞ்சங்களில் கொண்டிருப்பவர்களால் நன்றாகப் புரிய முடியும்! மேலும், இந்த உண்மைத்துவத்தைப் பிரதிபலிக்கக்கூடியதாக மாநபி (ஸல்) அவர்களின் இந்த நபிமொழி உள்ளது. இதில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

نِيَّتُ الْمُؤْمِنِ خَيْرٌ مِّنْ عَمَلِهٖ


அதாவது, சிலவேளை எப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகி விடுகிறது என்றால், நம்பிக்கை கொண்டவர் ஒருவரின் நல்ல நிய்யத் மற்றும் தூய உள்ளத்து உணர்வுகள் அவருடைய அமல்களை முந்திச் சென்று விடுகின்றன. அமலை விட அதிகம் ஏற்றுக் கொள்ளப்படுதலுக்கான தரத்தையும், கண்ணியத்தையும் பெற்று விடுகின்றன.

அன்பு கட்டுபடுதலை எதிர்ப்பார்க்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃ.பா (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுதலுக்கான நிலை எப்படி இருந்தது என்றால், ஒவ்வொரு சிறிய பெரிய வேலைகளை செய்வதற்கு முன்பும், இந்த செயல் அல்லாஹ்வின் கூற்று மற்றும் மாநபி (ஸல்) அவர்களின் கூற்றுக்குக் கீழ் வருகிறதா, இல்லையா என்று பார்த்து வந்தார்கள். ஒவ்வொரு பணியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைக் கருத்தில் கொண்டு வந்தார்கள். எதுவரை என்றால், வெளிப்படையில் பார்க்கையில், சின்னச் சின்ன விஷயங்களாக இருப்பவற்றிலும் தம் எஜமானருக்குக் கட்டுப்படுவதில் இன்பத்தை உணர்வார்கள். மேலும், அதை அசாதாரணமான முறையில் கருத்தில் கொள்வார்கள். ஆக, இப்பொழுது நான், வெளிப்படையில் பார்க்கையில், மிகவும் சாதாரணமானவையாக இருக்கும் இரண்டு நிகழ்வுகளை எடுத்துக் கூறுகிறேன். ஏனெனில், பெருமளவில் சிறிய விஷயங்கள் மூலமாகவும் மனிதனின் பங்களிப்பு வெளிப்படுவ -துண்டு.

ஒருமுறை, ஹுஸூர் (அலை) அவர்கள் மவ்லவி கரம்தீன் தொடுத்த வேதனை தரும் குடும்ப வழக்கு தொடர் -பாக குர்தாஸ்பூருக்குச் சென்றார்கள். அது கடும் வெப்பமான காலநிலையாக இருந்தது. இரவு நேரமாக இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் ஓய்வெடுப்ப -தற்காக வீட்டின் திறந்த மொட்டை மாடியில் கயிற்றுக் கட்டில் விரிக்கப் -பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாடியில் சுற்றுப்புறத் தடுப்புச் சுவர் எதுவும் இல்லை என்பதைப் பார்த்ததும், அன்னார் தொண்டர்களிடம், “ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுற்றுப்புறத் தடுப்புச் சுவர் இல்லாத மாடியில் உறங்குவதைத் தடுத்துள்ளார்கள் என்ற விஷயம் உங்களுக்குத் தெரியாதா?” என்று கோபமாகக் கூறினார்கள். பிறகு, அந்த வீட்டில் பொருத்தமான வேறு வளாகம் ஏதும் இல்லாததால், ஹுஸூர் (அலை) அவர்கள் கடும் வெப்பம் இருந்தும், அடைப்பட்ட அறையில் இரவைக் கழித்து விட்டார்கள். ஆனால், சுற்றுப்புறத் தடுப்புச் சுவர் இல்லாத அந்த மாடியில் உறங்கவில்லை.

இன்னொரு தருணத்தில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது அறையில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது வெளியில் இருந்து வந்திருந்த சில விருந்தினர்களும் அன்னாரின் அவையில் இருந்தார்கள். அப்பொழுது யாரோ ஒருவர் கதவைத் தட்டினார். அதனால் அந்த நேரத்தில் அங்கிருந்த மக்களில்

ஒருவர் எழுந்து கதவைத் திறக்கப் பார்த்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அந்த நபர் எழுவதைப் பார்த்ததும் விரைவாக எழுந்தார்கள். மேலும், “இருங்கள். இருங்கள்! நானே கதவைத் திறக்கிறேன். நீங்கள் விருந்தினர் ஆவீர்கள். விருந்தினருக்குக் கண்ணியம் அளிக்க வேண்டும் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்” என்று கூறினார்கள்.




ஒவ்வோர் அசைவின்போதும், தனது பார்வையைத் தம் அன்பிற்குரியவரின் பாவனைகள் மீது வைத்துள்ள ஓர் உண்மைப் பேரன்பரைத் தவிர வேறு ஒருவர் வெளிப்படையாக இந்த அளவு மிகவும் சாதாரணமான வழிகாட்டல்களைக் கூட கருத்தில் கொள்ளவே முடியாது.

அடுத்து, பேரன்பும் நேசமும் தன்மானத்தையும் எதிர்ப்பார்க்கின்றன. இது தொடர்பாக ஒரேயொரு நிகழ்வை மட்டும் எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பண்டிதர் லேக்ராமை யாருக்குத் தான் தெரியாது. அவர் ஆரிய சமயத்தின் மிகப் பெரும் மதத் தலைவராக இருந்தார். அத்துடன் இஸ்லாத்திற்குக் கடுமையான எதிரியாகவும் இருந்தார். அவரது நாவு இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் தூய தோற்றுநர் (ஸல்) அவர்களையும் எதிர்ப்பதில் கத்திரியைப் போன்று இயங்கியது; கத்தியைப் போன்று வெட்டியது.

அவர் வாழ்நாள் முழுவதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக நின்று இஸ்லாத்தின் மீதும், இஸ்லாத்தின் தூய தோற்றுநர் (ஸல்) அவர்கள் மீதும் அசுத்தத்திலும் அசுத்தமான ஆட்சேபனைகளை செய்தார். ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவருக்கு எப்படிப்பட்ட வாயடைக்கச் செய்யும் பதில்களை வழங்கினார்கள் என்றால், வேறு எவர் கொடுக்க முடியும்? ஆனால், இவர் நிறுத்தபவராக இருக்கவில்லை. இறுதியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் பண்டிதர் லேக்ராமுக்கு இடையிலான இந்தப் போட்டி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஓர் அறைகூவலில் நிறைவுற்றது. அதன் விளைவாக பண்டிதர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அல்லும் பகலும் இரட்டிப்பு முன்னேற்றங்களைக் கண்டு, ஆயிரக்கணக்கான ஏக்கங்களைத் தனது நெஞ்சத்தில் ஏந்தியவாறு இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.

அதே பண்டிதர் லேக்ராமின் இன்னொரு நிகழ்வாகும். ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏதோ ஒரு பயணத்தில் ஒரு இரயில் நிலையத்தில் இரயிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்நேரம் பண்டிதர் லேக்ராமும் அந்தப் பக்கமாகக் கடந்து சென்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த இடத்துக்கு வருகை தந்துள்ளார்கள் என்பதை அறிந்து, பண்டிதர் உலகவாதிகளின் வடிவில் தனது மனதுக்குள் தீச்சுடரை அமுக்கி வைத்துக் கொண்டு அன்னாருக்கு முன்னால் வந்தார். ஹுஸூர் (அலை) அவர்கள் அப்பொழுது தொழுகைக்கு ஆயத்தமாக உளூ செய்து கொண்டிருந்தார்கள். பண்டிதர் லேக்ராம் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன்னால் வந்து ஹிந்துக்களின் வழிமுறைப்படி சலாம் கூறினார். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பார்க்கவே பார்க்காதது போன்று அதற்கு எந்த பதிலும் அளிக்கவில்லை.

இதனால் பண்டிதர் மறுபக்கமாக வந்து மீண்டும் இரண்டாவது முறை சலாம் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீண்டும் மௌனமாக இருந்தார்கள். பண்டிதர் நம்பிக்கையிழந்து திரும்பிச் சென்றதும், ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பண்டிதர் லேக்ராமின் சலாத்தைக் கேட்டிருக்க மாட்டார்கள் என்று நினைத்து ஹுஸூர் (அலை) அவர்களிடம், பண்டிதர் லேக்ராம் வந்திருந்தார் சலாம் கூறிக் கொண்டிருந்தார் என்று பணிவுடன் கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தன்மானத்துடன், நம் எஜமானர் அவர்களையோ ஏசுகின்றார். எமக்கு சலாம் கூறுகின்றாரா!!! என்று கூறினார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1, பக்கம் 254, இர்ஃபானீ சாஹிப் அவர்கள் எழுதிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு)

இது, ஒவ்வொரு வட்டத்தின் மக்களுக்கும் முழுக்க முழுக்க கருணையாக இருந்த அந்த நபரின் கூற்றாகும். ஹிந்துக்களில் நாள்தோறும் சந்திக்கும் அவருடைய நண்பர்கள் இருந்தார்கள். அவர் ஒவ்வொரு சமுதாயத்துடனும் மிகவும் பரிவுடனும், பெரும் அனுதாபத்துடனும் நடந்து கொண்டார். ஆனால், அவருடைய எஜமானரும், அன்பிற்குரியவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தன்மானம் பற்றிய விஷயம் வந்தபோது, அவரை விடப் பெரிய உருவிய வாள் உலகில் வேறு எதுவும் இருக்கவில்லை. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் M.A., (ரலி) அவர்கள் இயற்றிய சீரத்தே தய்யிபா பக்கம் 25-26)

(தொடரும்...)

# இறையறிவிப்பு (வஹீ) மட்டுமே சந்தேகம் என்னும் வெள்ளப்பெருக்கிலிருந்து மனிதனைக் காப்பாற்றுகின்றது!

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்கூறுகிறார்கள்:

முழு உலகமும் இதனை அறிகின்றது. பார்வையுள்ள அனைவரும் இதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர், அறிவுள்ள உள்ளங்கள் இதைக் கணித்தும் வருகின்றன. அது என்னவெனில், உலகத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் இருந்துள்ளனர்; இன்னும் இருக்கின்றனர். அவர்கள் அறிவின் மேன்மையிலும் பெருமையிலும் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் 'அறிவின் தூதர்' என்று போற்றப்பட்டவர்களும், 'ஞானிகள்' என்று அழைக்கப்பட்டவர்களும், அறிவை ஒரு விலைமதிப்புள்ள பொருளாகவும், தங்களுக்கான வழிகாட்டி -யாகவும் கருதியவர்களும் ஆவர். எனினும், இறைஇருப்பை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிப்பின் நிலையிலேயே மரணித்து விட்டார்கள். ஆனால், இறைவெளிப்பாட்டின் (வஹீ) மீது நம்பிக்கை வைத்தவர்களில் ஒருவர் இறைவனின் இருப்பை மறுத்து நிராகரித்தவராகவே மரணித்து விட்டார் என்பதற்கு ஒரே ஓர் உதாரணத்தை மட்டும் எனக்குக் காட்டுங்கள்.

எனவே, உறுதியான இறைநம்பிக்கைக்கான ஒரே நிபந்தனையாக இறைவெளிப்பாடு (வஹீ) தான் இருக்கின்றது என்பதால், அந்த நிபந்தனை பூர்த்தியாகவில்லை என்றால், அதனால் ஏற்பட வேண்டிய முடிவும் இருக்காது என்பது தெளிவாகிறது. எனவே, இப்போது இது தெளிவாக நிரூபிக்கப்பட்டு விட்டது: அதாவது இறைவெளிப்பாட்டை மறுத்தவர்கள் நிச்சயமாக நிராகரிப்பின் பாதையையே தேர்ந்தெடுத்துள்ளார்கள். மேலும் இறைமறுப்பு என்ற கோட்பாடு பரவ வேண்டும்; பரப்பப்பட வேண்டும் என்பதை அவர்கள் பொருத்தமானதாகக் கருதுகிறார்கள்.

இவர்கள் அறியாமையினால் சிந்திக்க மறுக்கின்றார் -கள். ஏனெனில், மிகவும் மறைவானவனாகிய இறைவன் பார்க்கப்பட முடியாது; நுகரப்படவும் முடியாது; தொட்டும் உணரப்பட முடியாது. அதைப் போன்று கேட்கும் திறனும் இழப்பிற்குரியதாகி முழுமையான அந்த இருப்பின் வார்த்தையைக் குறித்து அறியாமல் இருக்கின்றது என்றால் பின்னர் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட அந்த இருப்பை எப்படித்தான் நம்ப முடியும்?

உலகத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, ஒருவேளை ஒரு படைப்பாளன் இருக்கலாம் என்று எண்ணம் தோன்றலாம். ஆனால், வாழ்நாள் எல்லாம் தேடிய பிறகும் அந்த உண்மையைத் தேடுபவர் தனது கண்களால் அந்த படைப்பாளனை ஒருபோதும் காணவில்லை. அவன் கூறிய வார்த்தையையும் அறியவில்லை. உயிருள்ளவனாகவும் செயலில் இருப்பவனாகவும் அவனைப் பற்றி எந்தச் சான்றையும் காணவில்லை என்றால் இப்படியொரு சந்தேகம் அவருக்கு தோன்றாதா?: ஒருவேளை நான் மேற்கொண்ட சிந்தனை தவறாகவே இருந்திருக்கலாமோ? ஒருவேளை, இறைமறுப்பாளர்கள் (Atheists) மற்றும் இயற்கைவாதிகள் (Naturalists) கூறி வருவதுதான் உண்மையாக இருக்குமோ? அவர்கள் சில பொருட்கள் மற்ற சில பொருட்களை உருவாக்குகின்றன என்கிறார்கள். மேலும், வேறு எந்த படைப்பாளனும் தேவையில்லை என்றும் கருதுகிறார்கள்!"

இதுதான் அவர்கள் சிக்கிக் கொண்ட குழப்பமான நிலை!

நான் நன்கு அறிவேன்: ஒருவன் வெறும் அறிவின் வழியை மட்டும் பின்பற்றினால், இத்தகைய சிந்தனையை கட்டுப்பாடின்றி தொடர விட்டால், அவனது உள்ளம் மேலே குறிப்பிடப்பட்ட அந்த சந்தேகத்தினால் உறுதியாகப் பிடிபடும். ஏனெனில், இறைவனின் சொந்த அடையாளம் ஒன்றை தனது மிகுந்த முயற்சியும் தேடலும் ஆகியவற்றால் கூட கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், அவனுக்கு அந்த சந்தேகங்களில் இருந்து தப்பிக்கவே முடியாது.

ஏனெனில், மனிதனின் இயல்பான சுபாவமே இதுவாகும்: அவன் ஏதேனும் ஒரு விஷயத்தை மிக அவசியமானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் கற்பனை மூலம் நம்பினாலும், அதை வெளிப்படையாகக் கண்டறிய அவன் எவ்வளவு தேடியும், ஆராய்ந்தும் அதனைக் காணவில்லை என்றால், அவன் தன் கற்பனையின் உண்மைமைத் தன்மையை சந்தேகிக்கத் தொடங்குகிறான். உண்மையாகவே, அவன் மனதில் அந்தக் கற்பனையை எதிர்க்கும் நூற்றுக்கணக்கான சந்தேகங்கள் எழ ஆரம்பிக்கின்றன.

நாம் அனைவரும், அறிந்திராத ஒன்றைப் பற்றி மீண்டும் மீண்டும் மனதில் ஓர் ஊகத்தை உருவாக்குகிறோம். "இது இவ்வாறாக இருக்கலாம் அல்லது அவ்வாறாக இருக்கலாம்" என்று. ஆனால் உண்மையின் விவரங்கள் பிறகு தெரிய வந்தால், அது நம்முடைய ஊகத்துக்கு முற்றிலுமாக மாற்றமாக இருப்பதைக் காண்கிறோம். வெறும் ஊகங்களை ஏற்றுக்கொள்வது அறியாமையின் உச்சநிலையே ஆகும் என்ற பாடத்தை இந்த மாதிரியான அனுபவங்கள் மனிதனுக்கு கற்றுத் தருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், எந்தவொரு ஊகமான எண்ணமும் அதற்கேற்ப உண்மைகள் மூலம் ஆதரிக்கப்படவில்லை என்றால், அறிவு ஏற்படுத்தும் ஆடம்பரங்கள் அனைத்தும் ஒரு கானல் நீர் போன்றதே அல்லாமல் வேறு எதுவுமல்ல. அதன் இறுதி விளைவு இறைமறுப்பு (Atheism) கொள்கையாகவே இருக்கிறது.

எனவே, நீங்கள் ஓர் இறைமறுப்பாளராக இருக்க விரும்புகிறீர்கள் என்றால், உங்களுக்குப் பிடித்ததைச் செய்யலாம். ஆனால், நீங்கள் அந்த கொந்தளிக்கும் சந்தேகப் பெருக்கில் இருந்து (அதன் காரணமாக அறிவில் உங்களைவிட வலிமை பெற்றிருந்த பலர் ஒரே அலையெழுச்சியில் வீழ்ந்து விட்டனர்). மீள விரும்பினால், உண்மையான வஹீயின் (வெளிப்பாட்டின்) வலுவான கைப்பிடியை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்.

எப்படியிருப்பினும் வெறும் அறிவின் வழியே உங்கள் ஊகங்களை முன்னேற்றுவதால், ஓரிடத்தில் இறைவன் அமர்ந்திருப்பதை நீங்கள் காண முடியும் என்பது ஒருபோதும் நடக்காது. மாறாக, உங்கள் அறிவு வளர்ச்சியின் இறுதி முடிவு என்னவாக இருக்கும் எனில் நீங்கள் எந்த ஒரு வெளிப்படையான அடையாளமும் இல்லாத, உயிருள்ள -வனுக்கேற்ப எந்தத் தன்மைகளுமில்லாத ஓர் இறைவனை கண்டு கொள்ளும் நிலைக்கு வந்து விடுவீர்கள். பின்னர், அவனை நாடும் உங்களின் முயற்சியில் முழுமையாக வீழ்ச்சி அடைந்து, மனம் சோர்ந்து, நீங்கள் உங்கள் நாஸ்தீக சகோதரர்களுடன் கைகோர்த்துக் கொள்வீர்கள்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4 பக்கம் 87-89 ஆங்கிலப் பதிப்பு)

(தமிழில்: அபூ அப்தில்லாஹ்)

# அருளுக்குரிய கிலாஃபத்தின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றங்கள்




**மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் ஹயாத் சாஹிப்**
(Ameer, Jama'at Ahmadiyya, UK)
**தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்**

இன்று, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் மையத்தில் உள்ள ஒரு விஷயத்தைப் பற்றி பேசும் பெருமை எனக்கு கிடைத்துள்ளது. அது அருளுக்குரிய கிலா∴பத் அமைப்பின் மூலம் வளர்ச்சி மற்றும் அதன் உலகளாவிய தாக்கம் என்பதாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத் இந்தியாவில் அறியப்படாத ஒரு சிறிய கிராமத்திலிருந்து உலகளாவிய ஆன்மீக இயக்கமாக வளர்ந்துள்ளது.

அஹ்மதிய்யத்தில் உள்ள கிலா∴பத் ஒரு அரசியல் அமைப்பு அல்ல - இது ஒரு இறைவழி -காட்டுதல் பெற்ற ஆன்மிகத் தலைமையாகும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் மறைவுக்குப் பிறகு எல்லாம் வல்ல அல்லாஹ்வால் நிறுவப்பட்டது. எதிர்ப்புகள், இடம்பெயர்வுகள் மற்றும் துன்புறுத்தல் -களின் புயல்களுக்கு மத்தியிலும் ஜமாஅத் ஒற்றுமையாகவும், ஒழுக்கமாகவும், முன்னேற்றத்தில் நிலைத்திருப்பது கிலாபத்தின் மூலம் தான்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் புனித நோக்கத்தை நினைவுகூர்வதன் மூலம் தொடங்கலாம். மனிதனுக்கும் அவனை படைத்தவனுக்கும் இடையே உயிரோட்டமுள்ள தொடர்பை ஏற்படுத்துவதற்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நம்பிக்கையை உயிர்ப்பிக்கவும், உலகில் இருந்து மறைந்து போன அந்த ஒற்றுமையையும் அன்பையும் மீண்டும் நிலைநாட்டவும் நான் அனுப்பப்பட்டேன். மனிதனை மீண்டும் இறைவனிடமும், இறைவனை மீண்டும் மனிதனிடமும் கொண்டு வரவே நான் அனுப்பப்பட்டேன். (லெக்சர் லாஹூர், 1904).

மனிதகுலத்தை சீர்திருத்தவும், அமைதியை மீட்டெடுக்கவும், உயிருள்ள இறைவனை உலகிற்கு மீண்டும் அறிமுகப்படுத்தும் இந்த பணி கிலா∴பத் அமைப்பு மூலம் இன்றும் தொடர்கிறது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1908 இல் காலமானபோது, ஜமாஅத் ஒரு முக்கியமான கட்டத்தில் நின்றது. குழப்பம் ஏற்பட்டது, நிச்சயமற்ற தன்மை சமூகத்தை துண்டாட அச்சுறுத்தியது. அப்போதுதான் அல்லாஹ் மிகவும் பணிவுள்ள ஞானம் நிறைந்த அறிஞரான ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் (ரலி) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முதல் கலீ∴பாவாக உயர்த்தினான்.

ஹஸ்ரத் முதலாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் உடலின் மருத்துவர் மட்டுமல்ல, இதயங்களையும் ஆன்மாக்களையும் குணப்படுத்துபவர். ஜமாஅத்தில் பிளவு ஏற்படும் அபாயம் நிலவிய ஒரு காலத்தில், அவர்கள் ஒரு சமரசம் செய்பவராகவும் ஒருங்கிணைப்பவராகவும் இருந்தார்கள், குறிப்பிடத்தக்க அமைதி மற்றும் ஆன்மீக தொலைநோக்கு பார்வையுடன் ஜமாஅத்தை வழிநடத்தினார்கள். அவர்களது தலைமையின் காலம் சிறியதாக இருந்தாலும், முழுமையானது. அந்த நேரத்தில் பரந்த உலகம் அறியாத, சிறிய நகரமான காதியானில் இருந்து சர்வதேச அளவில் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை கொண்டு செல்ல முயற்சிகளை அவர்கள் தொடங்கினார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் செய்தி பூமியின் மூலை முடுக்கெல்லாம் அதன் பயணத்தைத் தொடங்கும் வகையில் தூதுவர்களையும் கடிதங்களையும் வெகு தொலைவில் அனுப்புமாறு அவர்கள் ஊக்குவித்தார்கள்.

குறைவான வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகள் இருந்தபோதிலும், அவர்களது வழிகாட்டுதலின் கீழ் ஜமாஅத்தின் உலகளாவிய பணிக்கான விதைகள் முதலில் விதைக்கப்பட்டன. இது புனிதமான தலைமையின் சக்திக்கு ஒரு சான்றாகும்.

முபாரக் அலி சாஹிப் 1914-ல் Review of Religions-ல் அவர்களது குணநலன்களை விவரிக்கும்போது, மதிப்பாய்வில் இவ்வாறு எழுதினார்: இந்த துறவி தனது பூக்களை உண்மையான முஸ்லிம்களாக மாற்ற முயன்றார்கள். முழுக்க முழுக்க இறைவனுக்கு

உரியவராகவும், வேறு எவருக்கும் இல்லாதவராகவும், உலகத்தின் முன் நம்பிக்கையின் தீபத்தை உயர்த்திப் பிடித்தவராகவும் இருப்பார்கள்.

ஹஸ்ரத் முதலாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மறைவுக்குப் பிறகு, அறிவு மற்றும் ஆன்மிக நுண்ணறிவு நிறைந்த வாக்களிக்கப்பட்ட மகனின் பிறப்பு குறித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் செய்யப்பட்ட முன்னறிவிப்பை அல்லாஹ் நிறைவேற்றினான்.

1914 ஆம் ஆண்டில், வெறும் 25 வயது இளைஞரான - ஹஸ்ரத் மிர்ஸா பஷிருதீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் இரண்டாவது கலீ∴பாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சிலர் அன்னாரது வயதையும் திறமையையும் சந்தேகித்தாலும், அவர்கள் சாதாரண தலைவர் இல்லை என்பது விரைவில் தெளிவாகியது. அல்லாஹ்வின் ஆதரவின் கீழ், அவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் தொலைநோக்கு மற்றும் ஆற்றல்மிக்க கலீ∴பாவாக திகழ்ந்தார்கள்.




அவர்கள் தமது பணியை ஜமாஅத்தின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் தொடங்கினார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் அன்ஸாருல்லாஹ் போன்ற கிளை அமைப்புகளை உருவாக்கி, வளர்ந்து வரும் ஜமாஅத்திற்கு கட்டமைப்பை அளித்து, பெரிய உலகளாவிய பொறுப்புகளுக்கு அதை தயார் செய்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்தின் தலைவர் மட்டுமல்ல. ஒரு மாபெரும் அறிவார்ந்த வல்லுனர் ஆவார்கள். அவர்கள் புனித குர்ஆனின் விளக்கத்தை ஐந்து தொகுதிகளில் எழுதியுள்ளார்கள். இது இன்றும் போற்றப்படும் ஒரு தலைசிறந்த படைப்பாகும். இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகளவில் பரப்புவதற்கான அவர்களது அழைப்பு, ஜமாஅத்தை ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றது - வாக்களிக்கப்பட்ட மஸீஹின் செய்தியை உண்மையான உலகளாவிய பணியாக மாற்றியது.

அவர்கள் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா -விற்கும் பயணம் செய்தார்கள், இஸ்லாம் மற்றும் ஜமாஅத்தை மரியாதை மற்றும் கண்ணியத்துடன் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். பின்னர் சர்வ சமய மாநாட்டில் உரை நிகழ்த்த இலண்டனுக்கு வந்தார்கள், அங்கு அவர்களது உரை மிகவும் ஆழமான பங்களிப்புகளில் ஒன்றாகப் பாராட்டப்பட்டது.

இலண்டனில் நடந்த உலக மார்க்கங் -களின் மாநாட்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க உரையைத் தொடர்ந்து, இலண்டனின் மையத்தில் உள்ள முதல் பள்ளிவாயிலான ∴பஸ்ல் மஸ்ஜிதின் அடிக்கல் நாட்டப்பட்டது. 1924 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதி, ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மேற்கு ஐரோப்பாவின் மிக முக்கியமான பள்ளிகளில் ஒன்றாக மாறும் விழாவிற்கு தலைமை தாங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஹுஸூர் (ரலி) அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது: மேற்குலக நாடுகளில் இஸ்லாம் பரவும் காலம் வரப்போகிறது, இந்த பள்ளி இஸ்லாத்தின் ஒளி வீசும் மையமாக இருக்கும்.

அந்த நேரத்தில், இலண்டன் உலகளாவிய செல்வாக்கின் மையமாக இருந்தது. மேலும் இந்த செயல் ஆழமான குறியீட்டு மற்றும் ஆன்மீக அர்த்தத்தை கொண்டிருந்தது: இது ஓர் உலகளாவிய பேரரசின் தலைநகரில் இஸ்லாத்தின் கொடியை நட்டியது. கடந்த ஆண்டு, அக்டோபர் 2024 இல், ∴பஸல் மஸ்ஜிதின் 100 ஆண்டு நிறைவடைந்ததைக் கொண்டாடினோம் - இது மேற்கில் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் மையமாக மட்டும் அல்லாமல், உலகளாவிய சக்திகளுக்கு வழிகாட்டுதல், மதங்களுக்கு இடையிலான உரையாடல் மற்றும் தார்மீக வழிகாட்டுதலுக்கான மையமாகவும் மாறியுள்ளது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இந்த பார்வை - மேற்கில் ஆன்மீக கோட்டையை நிறுவுவது பற்றிய முன்னறிவிப்பானது. இது கிலா∴பத்தின் எதிர்கால குடியேற்றத்திற்கும் ஜமாஅத்தின் உலகமயமாக்கலுக்கும் அடித்தளமாக அமைந்தது.

அவர்கள் இந்தியப் பிரிவினையின் போது ஜமாஅத்தை தொடர்ந்து வழிநடத்தினார்கள், மேலும்

*(தொடர்ச்சி 17 ஆம் பக்கம்...)*



# இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் சமூக நல்லொழுக்க வீழ்ச்சியைத் தடுத்தல்

**மதிப்பிற்குரிய அஸ்ஹர் ஹனீஃப் சாஹிப்**
(Naib Ameer, Jama'at Ahmadiyya, USA)

தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர், 1924-ஆம் ஆண்டில், ஹஸ்ரத் இரண்டாவது கலீ.்பத்துல் மஸீஹ், மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் ஐரோப்பாவின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளை ஆராய்வதற்கும், மேற்குலகில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எவ்வாறு எட்ட வைப்பது என்பதைத் தீர்மானிக்கவும். இரண்டாவதாக, இங்கு வாழும் மார்க்கங்களின் மாநாட்டில் ஒரு விரிவுரையை வழங்குவதற்காகவும் யு.கே சுற்றுப் பயணம் செய்தார்கள்.

அதற்கான தயாரிப்பில், அவர்கள் உடனடியாக இஸ்லாத்தின் கொள்கைகள் மற்றும் போதனைகளை விளக்க ஒரு நூலை எழுதத் தொடங்கினார்கள். அவர்கள் அதை உருது மொழியில் எழுதி, அவர்கள் புறப்படுவதற்கு முன்பு அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டார்கள். அஹ்மதிய்யத் உண்மையான இஸ்லாம் என்ற அந்த நூல், மாநாட்டின் இடமான இம்பீரியல் நிறுவனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டது. ஒருமுறை, அவர்கள் அந்தக் கல்வி நிறுவனத்திற்குச் சென்றிருந்தபோது, புத்தகத்தை கையில் வைத்திருந்த ஒரு பாதிரியார் வந்து அன்னாரை வரவேற்றார். மேலும் இவ்வாறு கூறினார்:

"உங்களுடைய இந்தப் புத்தகத்தை நான் நேற்றுப் பெற்றேன். இரவு உணவிற்குப் பிறகு படிக்க ஆரம்பித்தேன். இரவு முழுவதும் படித்துக் கொண்டே சென்றேன். காலை உணவிற்காக கீழே வருவதற்குள் நான் அதைப் படித்து முடித்து விட்டேன். அதில் நான் ஈர்க்கப்பட்டேன்." (.்பஸ்லே உமர் பக்கம் 174)

இந்நூல் எனது உரையின் தலைப்பான, 'சமூகத்தின் ஒழுக்கம் மற்றும் சமூக வீழ்ச்சியைத் தடுப்பதில் இஸ்லாத்தின் போதனைகள்' என்பதைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. ஆனால், இந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிக்குமாறு நான் மிகவும் பரிந்துரைக்கின்றேன். மேலும் இதைப் படிக்கும் எவருக்கும், ஈர்க்கக்கூடியதாகவும், அறிவூட்டுவதாகவும், நம்பிக்கையை மேம்படுத்துவதாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

### நல்லொழுக்க வீழ்ச்சியின் காரணி:

திருக்குர்ஆன் கூறுகிறது:

إِنَّمَا التَّوْبَةُ عَلَى اللّٰهِ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السُّوْٓءَ بِجَهَالَةٍ

அறியாமையினால் தீமையைச் செய்து விட்டு உடனே(யே) பாவமன்னிப்புக் கோருகிறவர்களின் பாவமன்னிப்பை மட்டும் ஏற்றுக் கொள்வதே அல்லாஹ்வுக்குக் கடமையாகும் (4:18)

இந்த வசனத்தைப் பற்றி தமது விரிவுரையில் இரண்டாவது கலீ.்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவனைப் பற்றிய உண்மையான அறிவு மற்றும் புரிதல் இல்லாமையே பாவத்தின் உண்மையான காரணம். இது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். அறிவுள்ள மனிதன் தெரிந்தே தன் கையை நெருப்பில் வைக்க மாட்டான். அவன் தெரிந்தே விஷம் உள்ள உணவை உண்ண மாட்டான். அவன் விழப்போகிறது என்று உறுதியாக நம்பும் வீட்டிற்குள் நுழைய மாட்டான். பாம்பின் புற்றுக்குள் தன் கையை நீட்ட மாட்டான். வெறும் கையுடன் சிங்கத்தின் குகைக்குள் நுழையவும் மாட்டார். நெருப்பு, விஷம், பாம்புகள் மற்றும் சிங்கங்களுக்கு மிகவும் பயந்த மனிதர்கள், இறைவனைப் பற்றிய முழுமையான புரிதல் இருந்தால், விஷத்தை விட கொடியதும், பாம்புகள் மற்றும் சிங்கங்களை விட ஆபத்தானது தீமைகள் மற்றும் ஒழுக்கக்கேடுகள் என்பதை அறிந்தால், அவர்கள் எப்படி அதன் பக்கம் செல்வார்கள்? எனவே, பாவம் என்பது அறியாமை மற்றும் இறைவனைப் பற்றிய உண்மையான புரிதல் இல்லாமையின் விளைவு என்பது தெளிவாகிறது. மேலும் நம்பிக்கை மற்றும் இறைவனைப் பற்றிய உண்மையான புரிதலுக்கு வழிவகுக்கும் ஒரு மார்க்கம் அதனைப் பின்பற்றுபவர்களின் ஒழுக்கத்தை அவசியம் பூர்த்தி செய்யும்.




## அறியாமையின் காலம்:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்கு முந்தைய காலம் ஏன் அறியாமையின் காலம் (ஜாஹிலியா) என்று அழைக்கப்பட்டது என்பதை இது தெளிவுபடுத்துகிறது. அது மனிதகுலத்தின் இருண்ட சகாப்தம். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்குகின்றார்கள்:

நமது எஜமானரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகம் முழுவதுமாகச் சீரழிந்து போயிருந்த காலத்தில் எழுப்பப்பட்டார்கள். எல்லாம் வல்ல இறைவன் கூறியது போல்: ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியிருந்தது. (30:42)

இதன் பொருள் என்னவென்றால், வேதம் வழங்கப் பெற்ற மக்கள் மற்றும் இறைவெளிப்பாட்டின் அனுபவம் இல்லாதவர்கள் அனைவரும் சிதைக்கப்பட்டுள்ளனர். புனித குர்ஆனின் நோக்கம் இறந்தவர்களை உயிர்ப்பிப்பதாக இருந்தது... அந்த நேரத்தில் அரேபியா மக்கள் காட்டுமிராண்டித்தனத்தில் மூழ்கியிருந்தனர். எந்த சமூக அமைப்பும் இருக்கவில்லை. மேலும் ஒவ்வொரு வகையான பாவம் மற்றும் தவறான நடத்தையிலும் அவர்கள் பெருமிதம் கொண்டனர். (இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் பக்கம் 22-23)

இருப்பினும், இரண்டு தசாப்தங்களில், திருக்குர்ஆனின் போதனைகள் அவர்களின் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றியது. காட்டுமிராண்டிகளை மனிதர்களாக உயர்த்தியது. பின்னர் அவர்களை நல்லலொழுக்க பண்புகளால் மெருகூட்டியது. இறுதியாக அவர்களை இறைஅடியார்களின் நிலைக்கு உயர்த்தியது.

இனச் சண்டை மற்றும் இரத்தப் பகைக்கு பெயர் பெற்ற மக்களிடமிருந்து, புனித நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்ததைப் போன்று ஒருவரால் சிரியாவிலிருந்து ஏமன் வரை - வடக்கிலிருந்து வெகுதூரம் தெற்கே - ஒட்டகத்தின் முதுகில் அமைதியாக பயணிக்க முடிந்தது. மேலும் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் பயப்பட வேண்டியது இருந்ததில்லை. அவர்கள் அதை அமைதியும் பாதுகாப்பும் கொண்ட நிலமாக மாற்றினர்.

இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய மற்றும் அதிசயமான மாற்றத்தை உலகம் கண்டதில்லை.

## நவீன அறியாமையின் காலம்:

நாம் எப்படிப்பட்ட காலத்தில் இருக்கின்றோம் என்றால் ஒரே நேரத்தில் ஒரு பக்கம் தொழில்நுட்ப முன்னேற்றம், மருத்துவ முன்னேற்றங்கள் மற்றும் வியப்பூட்டும் அதிசயங்கள். ஆனால் மார்க்கத்தின் மீது சந்தேகங்கள், சமூகக் கிளர்ச்சி மற்றும் குழப்பங்கள் நிறைந்த மறுபக்கம் இதை நாம் இன்று பார்க்கின்றோம்.

உலகம் யதார்த்தத்தில் வாதம் மற்றும் நாத்திகம் வேகமாக வளர்ந்து வருகின்றது, குறிப்பாக இளைஞர்களிடையே வேகமாக அதிகரித்து வருகிறது. ஏறத்தாழ 40% நாத்திகர்கள் 18-29 வயதுடையவர்களாக இருக்கின்றார்கள். சமீபத்திய ஆய்வுகளின் படி, பிரிட்டன் தனது முதல் நாத்திக யுகத்தில் நுழைகிறது, இப்போது ஆத்திகர்களை விட நாத்திகர்களே அதிகமாக இருக்கின்றனர்.

இது ஒரு நவீன அறியாமையின் காலம் மனிதகுலம் இறைவனை மறந்து விட்டது மற்றும் கை விட்டு விட்டது. இதன் விளைவாக நல்லொழுக்க மற்றும் சமூக ஒழுங்கு மிகவும் கீழ்நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. உலகளவில், இளைஞர்களின் மனச்சோர்வு மற்றும் பதட்டம் இதுவரை இல்லாத அளவு அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் 1,20,000-க்கும் அதிகமானோர் அதிகமான போதைப்பொருள் உபயோகத்தால் பலியாகியுள்ளனர். 2023-ல், 49,000 பேர் தற்கொலை செய்து கொண்டனர். ஒவ்வொரு 5 பெண்களில் ஒருவரும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். மேலும் 81% பெண்கள் தங்கள் வாழ்நாளில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருப்பதாகப் புகாரளிக்கின்றனர். அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான கருக்கலைப்புகள் செய்யப்படுகின்றன. CDC ஆண்டுதோறும் 2.4 மில்லியனுக்கும் அதிகமான பாலியல் நோய்களைப் பதிவு செய்கிறது.

மிகவும் வேதனையான விஷயம் என்னவென்றால், UK-ல் 20 குழந்தைகளில் ஒரு குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளது. 2022 ஆம் ஆண்டில், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் பற்றிய 1,07,000 புகார்கள் காவல்துறைக்கு கிடைத்தன. இது பத்தாண்டுக்கு முன் இருந்த எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகமாகும்.

பல நாடுகளில் விவாகரத்து விகிதம் 50% அதிகமாகஉள்ளது. வளர்ந்த நாடுகளில் 16% மக்கள் மட்டுமே தங்கள் அரசாங்கங்களை நம்புகிறார்கள்.

யுத்தங்களுக்காக பில்லியன்கள் செலவிடப்பட்டாலும், இலட்சக்கணக்கானவர்கள் பட்டினி மற்றும் பஞ்சத்தால் அவதிப்படுகின்றனர். பணக்காரர்களும் சக்திவாய்ந்தவர்களும் இன்னும் பலவீனமான தனிநபர்கள் அல்லது நாடுகளின் செல்வத்தை அபகரிக்கின்றனர். 10% மேல் வர்க்கத்தினர் மொத்த செல்வத்தில் 70% வைத்துள்ளனர்.

இவைதான் வாழ்க்கையின் கொடூரமான உண்மைகள். இவைகளே உலகம் முழுவதும் மக்கள் மாற்றத்தை கோரி, பொதுப் போராட்டங்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் தொடர்ந்து தங்கள் குரலை எழுப்பும் முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

இந்த எதிர்ப்பு இயக்கங்களில் பல புகழ்பெற்றவை: அவை, பிளாக் லைவ்ஸ் மேட்டர் (Black Lives Matter) அமைப்புசார் இனவெறியை முடிவுக்கு கொண்டு வர, #MeToo இயக்கம் பெண்கள் மீது நடைபெறும் பாலியல் வன்கொடுமை மற்றும் துன்புறுத்தலை ஒழிக்க, பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி உரிமை பெண்கள் கல்வி பெறுவதற்கான அடிப்படை உரிமையை உறுதி செய்யவும், அதை ஊக்குவிக்கவும் ஆகும்.

## இன சமத்துவம்:

இஸ்லாத்தின் போதனைகளின் வெளிச்சத்தில் இந்தப் பிரச்சினைகளை ஆராய்வோம். இன சமத்துவம் குறித்து திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

மக்களே! நாம் உங்களை ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம்.

இஸ்லாத்தின் இந்த ஆழமான போதனை மனிதகுலத்தின் ஒற்றுமை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு கலாச்சாரத்தை உருவாக்குகிறது.

A Man of God என்ற புத்தகத்தில், நமது அன்பிற்குரிய நான்காவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹமத் (ரஹ்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதியுள்ள ஐயன் அடம்சன் கூறுகிறார்:

1984 ஆம் ஆண்டு, பாகிஸ்தான் அதிகாரிகள் அன்னாரை கடத்தல் குற்றச்சாட்டில் அடிப்படை ஆதாரமில்லாமல் கைது செய்ய திட்டமிட்டதைத் தொடர்ந்து, அவர்கள் பிரிட்டனுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். பிரிட்டன் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கலீஃபாவை பாகிஸ்தானுக்கு நாடு கடத்துவதற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்தனர்.

பின்னர் அவர் தெரிவிக்கிறார். “பிரிட்டனில் முஸ்லிம் பெற்றோர் சங்கம் என்று அழைக்கப்படும் ஒரு விசித்திரமான அமைப்பு, ஹுஸூர் இன நல்லிணக்கத்தைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளார்கள் என்று புகார் கூறி அன்னாரை நாடு கடத்துமாறு கோரியது. ஹுஸூர் உடனடியாக இந்தக் குற்றத்தை ஒப்புக் கொண்டிருப்பார்கள்.”

இதுவே இஸ்லாமிய சகோதரத்துவத்தின் சாராம்சம். ஒருமுறை, ஆப்பிரிக்கா நாட்டைச் சேர்ந்த சில அஹ்மதிகள் உடன் கேள்வி பதில் நடைபெறுகையில், நமது அன்பிற்குரிய நான்காவது கலீஃபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள், இனவெறி குறித்து ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், இவ்வாறு கூறினார்கள்:

இஸ்லாம் இனவெறியின் மிகச் சிறிய வேர்களைக் கூட முற்றிலுமாக அகற்றி விடுகிறது. இது தூய நபி முஹம்மது (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் கடைசி நாட்களில் நிகழ்த்திய சொற்பொழிவில் அன்னாரது காலடியில் நசுக்கப்பட்டது. அன்று அவர்கள் கூறினார்கள்:

இந்த புனித நாள். இந்த புனித மாதம். இந்த பொய்யான பாரம்பரியங்களை நான் என் காலடியில் மிதிக்கிறேன். இதற்குப் பிறகு நீங்கள் ஒருபோதும் குடி, இனவாதம், நிறம், மதம் போன்றவற்றின் அடிப்படையில் சிந்திக்க வேண்டாம். மனிதர்கள் அனைவரும் ஒன்றுதான். எனவே இதுதான் இஸ்லாத்தின் புகழ்பெற்ற போதனையாகும், இதுவே இஸ்லாமின் மகத்தான போதனையாகும். உலகம் ஆர்வமாக நாடும் அமைதியை பெற்றுத் தரக்கூடிய போதனையாகும். ஆனால் வருத்தமளிக்கும் விதமாக, அந்த அமைதி நாம் எவ்வளவுதான் விரும்பினாலும் தள்ளிச் செல்கின்றது.




இன்று கூட அந்த அமைதி நம்மிடம் இருந்து விலகியதாகவே உள்ளது. ஜார்ஜ் ஃப்ளாய்டின் மரணம் Black Lives Matter இயக்கத்துக்கான ஒரு போர்க் குரலாக மாறி இருந்தாலும், ஐந்து ஆண்டுகள் கடந்த பிறகும் இத்தகைய அநீதிகளை தடுக்கும் வகையில் ஒரு கூட்டாட்சி சட்டமும் இயற்றப்படவில்லை. இது போன்ற போராட்டங்கள் நடந்ததே இல்லை என்ற மாதிரி நிலைமையாகி விட்டது. உண்மையான நீதிக்கும் சமத்துவத்துக்கும் உண்மையான வழியை இஸ்லாமே காட்டுகின்றது.

## கற்பு மற்றும் தவறான நடத்தை:

இரண்டாவதாக, பாலியல் ஒழுக்கக்கேடு மற்றும் தாக்குதல்களைத் தடுப்பதற்கான போதனைகளை விளக்கி, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:


இஸ்லாம், மற்ற மதங்களைப்போல் விபச்சாரம் செய்யாதே என்று மட்டும் சொல்லவில்லை. ஏனெனில், விபச்சாரம் பாவம் என்று சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. மாறாக இந்த பாவத்தில் விழுவதிலிருந்து நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது தான் கேள்வி?

இஸ்லாம், அந்த பாவத்திற்கு வழிவகுக்கும் வாயில்கள் மூடப்பட வேண்டும் என்று கூறுகிறது. அவைதான்: பார்வை, கேள்வி மற்றும் தொடுதல்.

ஒரு மனிதன் அழகான ஒருவரைப் பார்த்தால், அழகைப் பற்றிய புகழ்ச்சிகளை கேட்டால், கவர்ச்சியான குரலைக்

கேட்டால், அல்லது மென்மையான உடலைத் தொட்டால், அவனது மனம் அதை நோக்கி ஈர்க்கப்படுகிறது. அவன் பார்க்கும், கேட்கும், தொடும் அனைத்திலும் ஒரு சந்தோஷம் ஏற்படுகிறது. இதுவே அவனை அந்த விபச்சாரத்தின் வழியில் இழுக்கச் செய்யும். இதை சமூகத்துக்கும் ஒழுக்கத்துக்கும் மிகவும் ஆபத்தான விஷம் என முழு உலகமே கண்டிக்கின்றது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அன்னாரது இளமைக் காலத்திலும் ஒழுக்கரீதியில் சிறந்து விளங்கினார்கள். அந்நியப் பெண்ணை ஒரு பார்வை கூட பார்க்காதபடி கவனமாக இருப்பார்கள். இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அவர்கள் வீட்டிற்குள் நுழையும்போது, கதவை மூடும் போது வெளியில் ஒரு பெண்மணியையும் பார்த்து விடக் கூடாதென்ற எண்ணத்துடன், மிகுந்த தன்னடக்கத்துடன் நடந்து கொள்வார்கள். உள்ளே நுழைந்தவுடன், கதவை திரும்பிப் பாராமல், இரண்டு கைகளாலும் பின்னால் இருந்தபடியே கதவை மூடுவார்கள். அதன் பிறகே அவர்கள் திரும்பி கதவிற்கு தாழ் போடுவார்கள். (The Promised Messiah's residence in Sialkot: 1861 to 1868" - Al Hakam 19 March 2021 Issue 157 page 17)



ஹஸ்ரத் சௌத்ரி ஜ.்.பருல்லாஹ் கான் (ரலி) போன்ற உயர் உலகப் பதவிகளை வகித்த அன்னாரது தோழர்கள் கூட இந்த விஷயத்தில் முன்மாதிரியான ஒழுக்கத்தை வெளிப்படுத்தினார்கள்:

முதலாம் உலகப் போருக்கு முந்தைய காலத்தில், இந்தியாவுக்குத் திரும்பும் கப்பலில் பயணம் செய்தபோது, ஒரு வயதான ஐரோப்பியர் ஹஸ்ரத் சவுத்ரி ஸ.்.பருல்லாஹ் கான் (ரலி) அவர்களிடம் கூறினார்: "நீங்கள் ஒரு அழகான மனிதர், ஆனால் நீங்கள் மதுபானம் அருந்துவதில்லை, புகைபிடிப்பதில்லை. சிரிப்பதுமில்லை." அதற்கு ஹஸ்ரத் சவுத்ரி ஸ.்.பருல்லாஹ் கான் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்:

"நான் ஒப்புக்கொள்கிறேன். நான் மது குடிப்பதில்லை, புகையும் பிடிப்பதில்லை. ஆனால் நான் எப்போதும் சிரிக்கிறவன்தான்." அப்போது அருகிலிருந்த ஒரு பெண்மணி அந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டு கூறினார்:

"அந்த மனிதர் உண்மையில் கூறியது, நீங்கள் காதலிப்பதில்லை. அதாவது பெண்களை நோக்கிப் காதல் வயப்படும்படி பேச மாட்டீர்கள் என்று கூறினார்."

அதற்கு ஸ.்.பருல்லாஹ் கான் (ரலி) அவர்கள் கேட்டார்கள்:

'அவர் அந்த உண்மையை எப்படிக் கூற முடிந்தது?' அப்போது அந்தப் பெண் பதிலளித்து கூறினார்:

"நான் ஒரு பெண். எனக்கு தெரியும். நீங்கள் பெண்களை நோக்கி கவர்ச்சியாக நடந்து கொள்வதில்லை என்பதையும் நான் உறுதியாகக் கூறுகிறேன்." (My Mentor Anwar Kahlon page 4)

ஒரு காலத்தில் ஐரோப்பாவில் அடக்கம் ஒரு மரியாதைக்குரிய பண்பாக இருந்தது. உண்மையில், இடைக்காலத்தில் பெண்களுக்கு 'கற்பு' என்ற பண்பு மிகவும் பொதுவானது. சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு, இலண்டன் போன்ற நகரங்களில், பெண்கள் பொது இடங்களில் வாசனைத் திரவியம் அணிவது பொருந்தாததாகவும், முறையற்றதாகவும் கருதப்பட்டது. ஆனால் அனைத்தும் வேகமாக மாறியது. 'பெண்கள் சுதந்திரம்' என்று அழைக்கப்படும் பதாகையின் கீழ், மேற்கு நாடுகள் மெதுவாக அடக்கம் என்ற பண்பிலிருந்து விடைபெற்றன. வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எச்சரித்தார்கள்:

ஆண்கள் மற்றும் பெண்கள் இடையே கட்டுப்பாடின்றி கலந்துறவு நிகழ்வது, குடும்ப வாழ்க்கையின் அழிவுக்கும், தற்கொலைகள் நிகழும் நிலைக்கும் வழிவகுக்கிறது. இது இப்போது ஐரோப்பாவில் பொதுவானதாகி விட்டது. (மல்.்பூஸாத் தொகுதி 5 பக்கம் 33)

The Washington Post அமெரிக்க சிறுமிகள் எதிர்கொள்ளும் பேரழிவைக் குறித்து ஒரு முக்கியமான செய்தியினை வெளியிட்டது. இதுவே உலகின் பல பகுதிகளிலுள்ள சிறுமிகளுக்கும் பொருந்துகிறது. 2023 ஆம் ஆண்டு வெளியான அதிர்ச்சி தரும் தரவுகளின்படி, அமெரிக்காவில் உள்ள உயர் நிலைப்பள்ளி (High School) மாணவிகளில் மூன்றில் ஒருவர் தற்கொலை பற்றி யோசித்ததாக தெரிவித்தனர். இது கடந்த ஒரு பத்து ஆண்டுகளில் 60 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

ஏன் இவ்வளவு கொடூரமான நிலை ஏற்படுகிறது? என்ன காரணம்: சமூக ஊடக கலாச்சாரம் (Social Media Culture), ஆன்லைனில் ஏற்படும் வெறுப்பான விமர்சனங்கள், சுய நம்பிக்கையின் குறைவு, முன்னிறுத்தப்படும் அடைய முடியாத அழகு தரங்கள் (Unrealistic Beauty Standards)

ஒரு மாணவி இதைப் பற்றி கூறியதை பாருங்கள்:

"எங்களை யாரோ பார்க்கிறார்கள் என்று எப்போதும் நாங்கள் உணர்கிறோம். நாம் என்ன செய்தாலும், ஒரு தெரியாத கூட்டம் எங்களுடைய நடத்தை, எங்கள் சிரிப்பு, எங்கள் சாப்பிடும் விதம் ஆகியவற்றைப் பற்றி தீர்ப்பு வழங்குகிறது."

இந்த அழுத்தத்தை சிறுமிகள் உள்ளுக்குள் தாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் அது மிகவும் தீவிரமான நிலையை அடையும் வரை அவர்களால் பேச முடியவில்லை. அதிலேயே

மிகவும் வேதனையளிப்பது என்னவெனில், சுமார் 14 சதவீத மாணவிகள் தங்களை பாலியல் வலுக்கட்டாயத்திற்கு உட்படுத்தியதாக கூறியுள்ளனர்.

இது அவர்களுடைய ஆத்மாவையே நசுக்கி விடுகிறது. மேலும் இதுவே சிலருக்கு தற்கொலைக்குச் செல்லும் மிகப் பெரிய காரணமாக இருக்கிறது. இந்த தாக்குதலில் இருந்து பெண்களையும் சிறுமிகளையும் பாதுகாக்க சமூகம் தவறி விட்டது. இந்த உடல்ரீதியான துன்புறுத்தல், சமூக துன்புறுத்தல் மற்றும் உளவியல் விரக்தியிலிருந்து அவர்களைக் காக்க இஸ்லாத்தின் போதனைகள் அவர்களுக்காக வெளிப்படுத்தப்பட்டன.



## பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி:

இறுதியாக, இஸ்லாம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பிற்காக சமூகத் தொடர்புகளை ஒழுங்குபடுத்து -கிறது. ஆனால் அது அவர்களை கல்வியைத் தேடுவதிலிருந்து ஒருபோதும் கட்டுப்படுத்துவதில்லை. அல்லாஹ் கூறுகிறான்:

நீர், நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக. இது அவர்களுக்கு மிகத் தூய்மையானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதனை நன்கு அறிபவனாவான்.

நீர் நம்பிக்கை கொண்ட பெண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், தானாகவே வெளிப்படுவதைத் தவிர தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமலிருக்குமாறும் கூறுவீராக. (சூரா அந்நூர் 24 வசனம் 31-32)

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் விரிவாகக் கூறுகிறார்கள்:

மேற்கத்திய காதுகளில் இந்த விதிமுறைகள் விசித்திரமாகத் தோன்றும். ஆனால் இது முற்றிலும் பழக்கம் மற்றும் பழக்க வழக்கத்தால் ஏற்படுகிறது, ஏனென்றால் நடைமுறையில் அவற்றைச் செயல்படுத்துவது கடினம் அல்ல. பரவலாக கருதப்படுவது போல இஸ்லாம் எந்த வகையிலும் பெண்களை வீட்டின் நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைக்கவில்லை. இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாற்றில், பெண்கள் ஆண்களுடன் போர்க்களத்திற்குச் சென்றதைக் காண்கிறோம், நோயாளிகள் மற்றும் காயமடைந்தவர்களைக் கவனித்தார்கள். சவாரி செய்தார்கள். ஆண்களிடமிருந்து அறிவியல் மற்றும் கலைகளைக் கற்றுக் கொண்டனர். மேலும் ஆண்களுக்கு அவர்கள் கற்றுக் கொடுத்தனர். சுருக்கமாக, அவர்கள் அனைத்து நன்மையான சுதந்திரத்தையும் அனுபவித்தனர்.

அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், தங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது எல்லா விதமான பாவ எண்ணங்கள் அவர்களின் மனதில் நுழைவதிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு கழுத்து, தலை மற்றும் முகத்தை மூடுவது அல்லது முக்காடு அணிவது மட்டுமே. பெண்களை அவர்களது வீடுகளுக்குள் அடைத்து வைப்பதும், அனைத்து அறிவுசார் நோக்கங்களிலிருந்தும் அவர்களை மூடுவதும் இஸ்லாத்தின் போதனைகளின் ஒரு பகுதியாக இல்லை. மேலும் பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் வழியும் இது அல்ல.

பெண்களுக்கான கல்வி உரிமைகளில் முதல் மற்றும் முதன்மையான வெற்றியாளர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே. ஹஸ்ரத் அபூ ஸயீத் அல் குத்ரீ (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவித்தார்கள்:

ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்கள் சொற்பொழிவு -களால் ஆண்கள் மட்டுமே பயனடைகிறார்கள். ஒரு நாளை எங்களுக்கு நிர்ணயம் செய்யுங்கள். அன்று, அல்லாஹ் உங்களுக்குக் கற்றுத் தந்ததை நீங்கள் எங்களுக்குக் கற்றுத் தாருங்கள் என்று கூறினார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வரும் நாளில் இந்த இடத்தில் ஒன்று கூடுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் ஒன்று கூடினார்கள். நபி (ஸல்) அவர்கள் வந்து அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். (ஸஹீஹ் அல் புகாரி 7310, ஸஹீஹ் முஸ்லிம் 2634)

நன்னடத்தை மற்றும் சமூக ஒழுங்கை மேம்படுத்த இஸ்லாத்தின் பரந்த போதனைகளின் ஒரு கண்ணோட்டம் தான் இது. உலகம் இஸ்லாத்தை தொடர்ந்து ஏற்றுக் கொண்டு, திருக்குர்ஆனின் போதனைகளை ஏற்றுக் கொண்டு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறந்த முன்மாதிரியைக் கடைபிடித்திருந்தால் கற்பனை செய்து பாருங்கள். சமூகமாற்றத்திற்கான இந்த இயக்கங்கள் எதுவும் அவசியமாக இருந்திருக்காது, மேலும் உலகம் அமைதி மற்றும் நீதியின் புகலிடமாக இருந்திருக்கும். கலவரங்கள், கிளர்ச்சிகள் மற்றும் உள்நாட்டு எழுச்சிகளிலிருந்தும் விடுபட்டிருக்கும். ஆயினும் கூட, மனிதகுலத்தின் இந்த நிலையைச் சரி செய்ய இன்னும் வாய்ப்பு உள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து மனிதர்களுக்கும் இனி வரும் காலங்களில் தூதராக அனுப்பப்பட்டார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

الٓرٰ ۟ كِتٰبٌ اَنۡزَلۡنٰهُ اِلَيۡكَ لِتُخۡرِجَ النَّاسَ مِنَ الظُّلُمٰتِ اِلَى النُّوۡرِ ۙ
بِاِذۡنِ رَبِّهِمۡ اِلٰى صِرَاطِ الۡعَزِيۡزِ الۡحَمِيۡدِ ۙ

அலி∴ப் லாம் ரா. (இது) ஒரு வேத நூல். நீர் மக்களை அவர்களின் இறைவனின் கட்டளையால் இருள்களிலிருந்து

ஒளியின்பால் வெளியேற்றி, மிகைத்தோனும், புகழக்குரியோனுமாகிய அவர்களின் இறைவனின் வழியில் கொண்டு செல்ல நாம் இதனை உமக்கு இறக்கினோம். (திருக்குர்ஆன் 14:2)

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மனித குலத்தை இறைவனைப் பற்றிய உண்மையான புரிதல் மற்றும் அறிவிற்கு மீண்டும் அழைத்துச் செல்ல இறைஒளியின் ஜோதியாக இருந்தார்கள். 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் உலகம் கண்ட மாபெரும் புரட்சி இன்று மனிதகுலம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் நிகழலாம். முஹம்மது (ஸல்) அவர்களின் 'நூர்' (ஒளி) மூலம் முதலில் பயனடைந்தவர்கள் தோழர்களே என்பதை நினைவில் கொள்வோம்.


இதன் விளைவாக, அவர்கள் அந்த ஒளியை தங்களிடத்தில் பிரதிபலிக்கின்றார்கள் மற்றும் தங்கள் மக்களுக்கு வழிகாட்டும் நட்சத்திரங்களாக மாறினார்கள். ஜமாஅத்தின் உறுப்பினர்களை நோக்கி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஒருமுறை அறிவித்தார்கள்: "உங்களைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள், உலகம் சீர்திருத்தப்படுவதை நீங்கள் காண்பீர்கள்." (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 10)

அல்லாஹ்வுடனான உறவை மேம்படுத்த நாம். ஒவ்வொருவரும் தொடர்ந்து பாடுபட்டால், அல்லாஹ்வின் ஒளி, குர்ஆனின் ஒளி மற்றும் முஹம்மது (ஸல்) அவர்களின் ஒளியை உள்வாங்கி மற்றவர்களுக்கு வழங்கினால், முழு உலகமும் (இன்ஷா அல்லாஹ்) உண்மையான இஸ்லாத்தின் பக்கம் நுழையும்போது, அந்த மகத்தான ஒழுக்க சீர்திருத்தம் மற்றும் ஆன்மீகப் புரட்சியை நோக்கி நாம் நமது வேகத்தை அதிகரிக்க முடியும்.

நமது அன்பிற்குரிய இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் தம் சொற்பொழிவை முடித்த அதே உந்துதலான வார்த்தை -களுடனும், காலத்தைக் கடக்கும் செய்தியுடனும் நான் என் உரையை முடிக்கிறேன்.

"ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் கேளுங்கள்! நாம் இறைவனால் படைக்கப்பட்டோம். எனவே அவனுடைய பண்புகளை நம்முன் உள்வாங்கி, அவனுடைய மகிமையின் வெளிப்பாடுகளாக நாம் மாறுவோம். இந்த நிலையை நாம் அடையாத வரையில் நாம் வெற்றி பெற்றதாகக் கூற முடியாது. நமது பொருள் முன்னேற்றத்தில் என்ன மதிப்பிருக்கின்றது? இது ஒரு பொழுதுபோக்கைத் தவிர வேறில்லை. நாம் இறைவனின் வெறுப்பை சம்பாதித்து, நிரந்தரமான ஆன்மீக முன்னேற்றத்தின் கதவை மூடிக் கொண்டால், இந்த முன்னேற்றம் நமக்கு என்ன பலனைத் தரும்?...

இங்கிலாந்தின் மக்களே! இந்த உலகில் இறைவன் உங்களுக்கு மரியாதை அளித்துள்ளான், இது உங்கள் பொறுப்பை அதிகரித்துள்ளது, ஏனென்றால் உதவிகளில் அதிக பங்கைக் கொண்டவர் கடினமான பொறுப்புகளைச் சுமக்கிறார்... நீங்கள் நிலத்திற்கான தேடலில் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்தீர்கள். புதிய பகுதிகளை ஆராய்தல், மற்றும் உங்கள் கடற்படைகள் எல்லா திசைகளிலும் கடல்களைத் தேடின, ஆனால் நிலத்தையும் கடலையும் படைத்த அன்பானவனைத் தேடி நீங்கள் ஒருபோதும் செல்லவில்லை. மரத்தில் இருந்து விழும் காய்ந்த இலைகளை சேகரித்து பழங்களை எறிவது புத்திசாலித் -தனமா?...



இறைவனின் அருள்கள் வரம்பற்றவையாகும். அவன் எல்லா நாடுகளுக்கும் எல்லா மக்களுக்கும் இறைவனாவான். அவனது உண்மையான அடியார் எல்லைகள் மற்றும் வடிவங்களின் வரம்புகளைத் தவிர்க்கிறார். அவர் உண்மையில் தனது சொந்த நாட்டையும் தனது சொந்த சமுதாயத்தையும் நேசிப்பவராவார். ஆனால் அவரது அனுதாபத்தின் அலை தனது சொந்த நாட்டிற்கும் தனது சொந்த சமுதாயத்தையும் தாண்டி பயணிக்கிறது. அவர் அத்தகைய வரம்புகளை எல்லாம் தாண்டியவராவார்.

அவர் முழு மனித குலத்திற்கும் நலனை விரும்புகிறார். மனிதர்களுக்கு உரிய சிறந்த பண்பான சகோதரத்துவத்ததுடன் எல்லா மனிதர்களிடமும் பிணைக்கப் -படுகிறார். ஏனெனில் அனைவரும் எல்லா உலகங்களின் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்புகள் ஆவோம். கருப்பர்கள் மற்றும் வெள்ளையர்கள், மேற்கு மற்றும் கிழக்கு, தனது சொந்த நாட்டினர் மற்றும் வெளிநாட்டினர் அவரது பார்வையில் அனைவரும் ஒன்றே. அவர்கள் ஒவ்வொரு -வருக்கும் அனுதாபம் அவரது இதயத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. மேலும் அவர்கள் அனைவரின் அன்பிலும் அவரது உள்ளம் நிறைந்துள்ளது.

அவர் உண்மையில் உலகங்களின் இறைவனின் உண்மையான வெளிப்பாடாவார். எனவே நான் எனது முகவரியை எந்த ஒரு குறிப்பிட்ட மக்களிடமோ அல்லது குறிப்பிட்ட நாட்டிடமோ சுருக்கி விடவில்லை. தம்முடைய

அருட்கொடைகளைப் பகிர்ந்தளிப்பதில் யாரிடமும் இரக்க -மின்மையில்லாமல், அனைத்து நாடுகளின் மக்களுக்கும் தனது கருணையின் கதவுகளைத் திறந்து விட்ட இறைவனின் செய்திக்கு நான் பூமியின் அனைத்து நாடுகளையும் அழைக்கிறேன்.

நான் கூறுகிறேன்: “அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மக்களே! ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்காவின் குடியிருப்பாளர்களே! ஆசியாவின் மக்களே! உங்கள் அலட்சிய தூக்கத்திலிருந்து விழித்தெழுங்கள், உங்கள் கண்களைத் திறந்து கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் அன்பின் சூரியன், அறியப்படாத காதியான் எனும் இடத்திலிருந்து உதயமாகியுள்ளது. நிலைத்திருக்கும் அரசன் தன் அடியார்களிடம் கொண்டிருக்கும் அன்பை ஒவ்வொருவருக்கும் நினைவூட்டுவதற்காக மற்றும் சந்தேகம், ஐயம் என்ற இருட்டைத் துரத்துவதற்காக, அலட்சியம் மற்றும் கவனக்குறைவை நீக்குவதற்காக, மனிதனுடைய விசுவாசம் மற்றும் அமைதி என்ற செல்வங்களை கொள்ளையடிக்க இடம் பார்க்கும் பாவம், தீமை, அடிமைத்தனம், கொலை, சண்டை மற்றும் பலவிதமான தீய செயல்களின் வழித்தட கொள்ளையர்கள் தங்கள் உண்மையான உறைவிடமான இருண்ட குகைகளில் ஓடிச் சென்று மறைந்து விடுவார்கள். இந்த பூமியில், ஆதாம் மற்றும் ஹவ்வாவை கடித்த பாம்பின் தலையை நசுக்கவும், சாத்தானின் விஷமத்தனங்களை முறிக்கவும், உலகத்தை அவனுடைய சூழ்ச்சிகளிலிருந்து விடுவிக்கவும், இந்த சூரியனின் ஒளியில் தூயமனதுள்ள பரிசுத்த மனிதர்கள் சொர்க்க மாதிரியான வாழ்வை வாழ்கின்றனர்.

எனது இறுதி வார்த்தைகள் அனைத்துப்புகழும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியது என்பதாகும்.

---

*(10 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

தெய்வீக தொலைநோக்குப் பார்வையுடன், பாகிஸ்தானின் ரப்வாவில் ஜமாஅத்தின் புதிய தலைமையகத்தை நிறுவினார்கள். இரண்டாம் கலீஃபாவின் வழிகாட்டுதலின் கீழ் ஒரு தரிசு, வெற்று நிலத்தில் தொடங்கியது, பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அச்சகங்கள் மற்றும் துடிப்பான சமூக வாழ்க்கையுடன் ஒரு செழிப்பான நகரமாக மாற்றப்பட்டது. ரப்வா ஜமாஅத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக தலைநகராகவும், புதிய தேசத்தில் கல்வி மற்றும் சேவையின் கலங்கரை விளக்கமாகவும் மாறியது.

பாகிஸ்தானின் ஆரம்ப ஆண்டுகளில் அதன் வளர்ச்சிக்கு அஹ்மதியர்களின் பங்களிப்பை மறுக்க முடியாது. நீதிபதிகளாக அரசு ஊழியர் -களாக, தூதர்களாக, ஜெனரல்கள் மற்றும் விஞ்ஞானிகளாக, அஹ்மதிகள் உயர் பதவிகளை வகித்தனர் மற்றும் விசுவாசத் -துடன் சிறப்பாக பணியாற்றினர்கள். போர்க்களத்தில் ஜெனரல் இப்திகார் ஜன்ஜுஃவா போன்ற மாவீரர்கள் பாகிஸ்தானுக்காக உயிரைக் கொடுத்தார் -கள். அறிவியலில், கிலாஃபத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஊக்கத்தின் கீழ், டாக்டர் அப்துஸ் சலாம் என்ற இளம் அஹ்மதி, இயற்பியலுக்கான முதல் முஸ்லிம் நோபல் பரிசு பெற்றவராக உயர்ந்தார்கள். ஜமாஅத்தின் உணர்வில் மேதையாக வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு மாபெரும் மனிதர் ஆவார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கீழ், ரப்வாவில் வருடாந்திர ஜல்ஸா ஸாலானா ஆண்டுதோறும் நடந்தது. கூடாரங்களில் ஆரம்பித்தது மகத்தான கூட்டங்களில் முடிந்தது. 1983-ல், ரப்வாவில் நடைபெற்ற இறுதி ஜல்சாவில் 2,75,000 பேர் கலந்து கொண்டனர் - கிலாஃபத்தின் ஒற்றுமை, அர்ப்பணிப்பு மற்றும் ஆன்மீக ஈர்ப்பிற்கு இது ஒரு சான்றாகும்.

ஆனால் முன்னேற்றத்துடன் எதிர்ப்பும் அதிகரித்தது. இரண்டாவது கலீஃபாவின் காலத்திலும் கூட, முனிர் விசாரணை எந்த ஒரு மதகுருவும் யார் முஸ்லிம் அல்லது யார் முஸ்லிம் இல்லை என்பதை வரையறுக்க முடியாது என்று அறிவித்தது. ஆனாலும், வெறுப்பு உதித்தது.

(தொடரும்...)



# நீங்கள் ஒரு சிறந்த நேரத்தில் ஒரு சிறந்த நோக்கத்திற்காகப் பிறந்துள்ளீர்கள்!



ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் 03.04.1987 அன்று இலண்டனில் உள்ள ஃபஸ்ல் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

✧✧✧ தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத் ✧✧✧

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

**நம்பிக்கைகள் உச்சத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன:**

மற்றொரு இடத்தில் அனைத்து எதிர்மறை அச்சங்களும் அகற்றப்பட்டு, நேர்மறையான நம்பிக்கைகள் உச்சத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ
وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا

(சூரா அந்நிஸா வசனம் 70)

அல்லாஹ்வின் மீது அன்பு கொண்டு முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிவதன் வெகுமதி ஒருவரை அல்லாஹ்வின் அன்பிற்குரியவராக மாற்றும் என்று அல்லாஹ் விளக்குகிறான். பிறகு அல்லாஹ் உங்களை தனது அன்பிற்குரியவரை ஆக்கிய பிறகு உங்களை எவ்வாறு நடத்துவான்? அல்லாஹ் தனது அன்பிற்குரியவரை எவ்வாறு நடத்துவான் என்பதற்கான இந்த வாக்குறுதியை விளக்க வேண்டும். “மன் யுதிஇல்லாஹ வர்ரஸூல” (அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிபவர்) இரண்டையும் ஒன்றாக இணைத்து, ஒருவருக்குக் கீழ்ப்படிதல் என்பது மற்றவருக்குக் கீழ்ப்படிதல் என்று விளக்குகிறான். அல்லாஹ்,

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ

என்று கூறுகிறான். நீங்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால், அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்ததால், அல்லாஹ் உங்கள் மீது தனது அருள்களை எவ்வாறு பொழிகிறான் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் விளைவாக நீங்கள் பெறாத வெகுமதி எதுவும் இல்லை. அவர்கள் கூறுகிறார்கள்:

مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ தீர்க்கதரிசிகள் மற்றும் உண்மை -யாளர்களிடையே. இந்த பரிசுகள் மலைகளைப் போல பெரியவை. நபித்துவத்தின் பரிசு உள்ளது. நீங்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றும் அளவு நீங்கள் அல்லாஹ்வுக்கு எவ்வளவு அன்பானவராக மாறுவீர்கள் என்பதைத் தீர்மானிக்கும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

நீங்கள் நீதியின் நிலையை மட்டுமே அடைந்தால், அந்த பரிசை அல்லாஹ் உங்களிடமிருந்து தடுக்கமாட்டான், மேலும் நீங்கள் மேலும் முன்னேறி ஷஹீதின் நிலையை அடைந்தால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிதலுள்ள பின்பற்றுபவராக இருந்ததற்கான வெகுமதியாக அந்த நிலையை அடைவீர்கள்.

நீங்கள் மேலும் முன்னேறி, உண்மையாளர்களின் நிலையைப் பெற தைரியம் இருந்தால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிதல் உங்களை உண்மையாளர் -களின் நிலைக்கு அழைத்துச் செல்லும் என்பதையும், இந்த வெகுமதி உங்களுக்கு வழங்கப்படும் என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இன்னும் சிறப்பாகச் செயல்பட்டு உங்கள் இருப்பை முழுவதுமாக அழிக்கும் வலிமை உங்களிடம் இருந்தால், அவருக்குக் கீழ்ப்படிந்தால், அவரது அத்தகைய ஊழியர்களுக்கு தீர்க்கதரிசனம் கூட வழங்கப்படலாம் என்பதில் உறுதியாக இருங்கள்.

புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான இந்த அன்பு ஒருபோதும் முடிவுராத வெகுமதிகளுக்கான கதவுகளைத் திறக்கிறது. இந்த அன்பு அல்லாஹ்வை நேசிப்பதற்கான நமது விருப்பத்துடனும் உறுதிமொழியுடனும் தொடங்கியது. அல்லாஹ் அனைத்து பாதைகளையும் திறந்து, அனைத்து அம்சங்களையும் விளக்கியுள்ளான். ஆனால், நான் ஏற்கனவே கூறியதுபோல், இது திருக்குர்ஆனின் ஒரு முக்கிய கருப்பொருளாகும். மேலும் அது முழுவதும் பரவுகிறது. இந்த தலைப்பின் அனைத்து அம்சங்களையும் ஒரு சில உரைகளில் உள்ளடக்க முடியாது. எனவே நான் சிலவற்றை உங்கள் முன் வைக்க தேர்ந்தெடுத்துள்ளேன்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான பூரண பேரன்பு: இறுதியில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உறுதிமொழியை நான் உங்களுக்கு முன்வைக்கிறேன். அவர் தம்மை முழுமையாகக் கையகப்படுத்தி, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே (அல்லாஹ்வின்) அன்புக்குரியவர் என்பதைக் கண்டுபிடித்தார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நேசித்தது போல வேறொருவரை நீங்கள் கண்டுபிடிக்க முடியாது. உலக நேசர்களிடமோ அல்லது

ஆன்மிக நேசர்களிடமோ இந்த வகையான அன்பை நீங்கள் காணமாட்டீர்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

اگر خواہیدلیلے عاشقشباش محمد ہست برہان محمد

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மைக்கு நீங்கள் ஒரு ஆதாரத்தைக் கேட்கிறீர்கள். அவர் மீது நேசம் கொள்வதன் மூலம் மட்டுமே நீங்கள் அதற்கான ஆதாரத்தைக் கண்டுபிடிக்க முடியும். இவ்வளவு பெரிய அனுபவத்தைப் பெறாத ஒருவர் ஒருபோதும் அத்தகைய அறிவிப்பைச் செய்ய முடியாது.

முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ள விரும்பினால், அவர்களது அழகைப் பாருங்கள். அது அல்லாமல் நீங்கள் தர்க்கம் மற்றும் பகுத்தறிவில் சிக்கிக் கொள்ளத் தேவையில்லை என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் அழகானவர்கள் ஆவார்கள். அவர்களைப் பார்த்து அவர்கள் மீது நேசம் கொள்ளுங்கள்.

வேறு எந்த ஆதாரமும் தேவையில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் தாமே தமது சொந்த அழகிற்கு சாட்சியாவார்கள். பின்னர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் அருளால் மட்டுமே, என்னுடைய எந்தத் திறமையினாலும் அல்ல. எனக்கு முன் தீர்க்கதரிசிகள், தூதர்கள் மற்றும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள் மீது வழங்கப்பட்ட அருள்களின் முழுப்பங்கையும் நான் பெற்றுள்ளேன். என் இறைவனின் அடிச்சுவடுகளையும், என் எஜமானரின், அனைத்து தீர்க்கதரிசிகளின் பெருமையையும், மனிதகுலத்தின் சிறந்தவரான முஹம்மது (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளையும் நான் பின்பற்றி இருக்காவிட்டால், இந்த அருளை நான் அடைந்திருக்க முடியாது. நான் எதைச் சாதித்தாலும், அவரைப் பின்பற்றுவதன் மூலமே நான் சாதித்தேன், மேலும் சரிபார்க்கப்பட்ட, நம்பகமான தனிப்பட்ட அனுபவத்திலிருந்து, அந்த தீர்க்கதரிசனத்தைப் பின்பற்றாமல் எந்த மனிதனும் இறைவனை அடையவும், அவனுடைய வழிகளைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறவும் முடியாது என்பதை நான் அறிவேன். இப்போது, புனித நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் போதனைகளுக்கு நீங்கள் முழுமையாகக் கட்டுப்பட்ட பிறகு, நீங்கள் பெறும் முதல் விஷயம் என்ன என்பதையும் நான் தெரியப்படுத்துகிறேன்.

இந்த கட்டத்தில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விவாதத்தின் மையக் கருத்தை வெளிப்படுத்து -கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

முன்னர், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு எழுத்தைப் படித்தேன், அதில் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிதல் இதயத்தில் நடைபெறுகிறது. அதற்கு மனதுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. மேலும், பரிசுத்த நபி (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிதல் பற்றியும் அவர்கள் அதையே கூறுகிறார்கள்.

நான் எதைச் சாதித்தாலும், அவர்களை பின்பற்றுவதன் மூலமே நான் சாதித்தேன். மேலும் சரிபார்க்கப்பட்ட, நம்பகமான தனிப்பட்ட அனுபவத்திலிருந்து எனக்குத் தெரியும். அந்த தீர்க்கதரிசியைப் பின்பற்றாமல் எந்த மனிதனும் இறைவனை அடையவும், அவனுடைய வழிகளைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறவும் முடியாது. இப்போது, புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுறுத்தல்கள் மற்றும் போதனைகளுக்கு நீங்கள் முழுமையாகக் கீழ்ப்படிந்த பிறகு, உங்களுக்குக் கிடைக்கும் முதல் விஷயம் என்ன என்பதையும் நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அது என்னவென்றால், எப்போதும் சரியான சாய்வு கொண்ட ஒரு ஆரோக்கியமான இதயம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, அதாவது, இந்த உலகின் அன்பில் குளிர்ந்த ஒரு இதயம், அதற்கு பதிலாக அது ஒரு நித்திய சொர்க்க இன்பத்திற்காக ஏங்கத் தொடங்குகிறது. இந்த விருப்பத்தை அடைந்த பிறகு, இந்த இதயம் இப்போது அந்த பரிபூரணமான மற்றும் தூய்மையான அன்பைப் பெறத் தகுதியானது இறைவனின் அன்பு. பரிசுத்த தீர்க்கதரிசிக்கு முழுமையான கீழ்ப்படிதல் காரணமாக, இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் அவருடைய ஆன்மிக மரபாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.” (ஹகீகத்துல் வஹீ, பக்கம் 127)

இந்த தலைப்பின் சில அம்சங்களை இன்று விளக்க விரும்பினேன். ஆனால் நேரம் குறைவாக உள்ளது, அவற்றில் சிலவற்றைக் கூட விளக்குவது சாத்தியமில்லை. எனது கடைசி ஜுமுஆ உரையில் ஜமாஅத்திற்கு முன் ஒரு புதிய திட்டத்தை முன் வைப்பேன் என்று சொன்னேன், அது இந்த விஷயத்துடன் தொடர்புடையது.

அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்துதல் பற்றிய பரந்த மற்றும் சரியான போதனை:

ஒருவர் அன்பில் இருக்கும்போது, பரிசுகளை வழங்க முனைகிறார் என்பது ஒரு உண்மையாகும். அல்லாஹ்வின் பாதையில் வழங்கப்படும் எதையும் அன்புடன் வழங்க வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. முழுமையான நன்மையின் வரையறையிலேயே அன்புடன் பரிசுகளை வழங்குவதற்கான ஒரு நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது என திருக்குர்ஆன் கூறுகிறது:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

(சூரா ஆல இம்ரான் வசனம் 93)

**நீங்கள் இறையச்சத்தை அறியவே மாட்டீர்கள்!**

**அல்லாஹ்வின் பாதையில் உங்களுக்கு மிகவும் பிரியமான பொருட்களை தியாகம் செய்யக் கற்றுக் கொள்ளும் வரை இறையச்சம் என்றால் என்ன என்பது உங்களுக்கு தெரியாது. அல்லாஹ்வின் பாதையில் உங்களுக்கு மிகவும் பிரியமான பொருட்களை தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆசை உங்கள் இதயத்தில் இல்லை என்றால், நீங்கள் இறையச்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை.**

நீங்கள் முழுமையான நன்மையை அடையவே முடியாது. நீங்கள் முழுமையான நன்மையைப் பற்றிப் பேசுகிறீர்கள். அதைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் மிகவும் விரும்புவதை அர்ப்பணிப்பதன் இரகசியத்தைக் கற்றுக் கொள்ளா விட்டால் நீங்கள் முழுமையான நன்மையை அடைய முடியாது. உங்களுக்குப் பிடித்தமானவற்றை அல்லாஹ்வுக்கு அர்ப்பணிக்கக் கற்றுக் கொண்டால், முழுமையான நன்மையின் அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்று சொல்லலாம். இதுவும் நேசம் என்ற பொருளின் தொடர்ச்சியாகும்.

இஸ்லாமுக்கு அன்பைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், அன்பின் போதனைகளைக் கொடுத்தது கிறிஸ்தவம் என்றும் கிறிஸ்தவர்கள் கூறுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இது சம்பந்தமாக, ஈஸா (அலை) அவர்களது போதனைகளிலிருந்து சில பகுதிகளை நான் உடன் கொண்டு வந்திருந்தேன். ஆனால் அவற்றைப் படிக்க எனக்கு நேரமில்லை. எனவே நீங்களே அவற்றைப் படிக்க வேண்டும். குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை நீங்கள் காண்பீர்கள். அன்பைப் பற்றிய இஸ்லாத்தின் போதனைகள் மிகவும் பரந்ததாகவும் முழுமையானதாகவும் இருப்பதால், இயேசுவின் போதனைகள் மிகவும் அழகாகவும் மிகவும் கவர்ச்சிகர-மானதாகவும் ஒப்பிடுகையில் வெளிர் நிறமாகவும் தெரிகின்றன. கிறிஸ்தவ போதனைகள் அழகாகவும் கவர்ச்சிகரமானதாகவும் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. ஆனால் இஸ்லாம் மனித வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அன்பை அறிமுகப்படுத்தியுள்ளது. வேறு எந்த மதத்திலும் இவ்வளவு விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அன்பின் தத்துவத்தை நீங்கள் காண முடியாது.

அது கூறுகிறது:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

சூரா ஆல இம்ரான் வசனம் 93

நீங்கள் இறையச்சத்தை அறியவே மாட்டீர்கள். அல்லாஹ்வின் பாதையில் உங்களுக்கு மிகவும் பிரியமான பொருட்களை தியாகம் செய்யக் கற்றுக் கொள்ளும் வரை இறையச்சம் என்றால் என்ன என்பது உங்களுக்கு தெரியாது. அல்லாஹ்வின் பாதையில் உங்களுக்கு மிகவும் பிரியமான பொருட்களை தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆசை உங்கள் இதயத்தில் இல்லை என்றால், நீங்கள் இறையச்சத்தைப் புரிந்து கொள்ளவில்லை.

### அல்லாஹ்வின் மீது புனித நபி (ஸல்) அவர்கள் காட்டிய அன்பின் உயர் தரம்:

இந்த அளவுகோலின் அடிப்படையில் இறைத் தூதர்களை நாம் மதிப்பிடும் போது, குறிப்பாக ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் சூழ்நிலைகளைப் பார்த்தால், இந்த குணம் முழுமையின் நிலையை அடைவதைக் காண்கிறோம். அன்பில் இருக்கும் பல ஆண்கள் இருக்கிறார்கள், அவர்கள் சிறந்த பரிசை வழங்க வேண்டும் என்பதை அறிவார்கள். அவர்கள் அதைப் பற்றி சிந்திக்கிறார்கள், இதை வழங்குவதா அல்லது அதை வழங்குவதா என்பதைத் தீர்மானிக்க முடியாது. சூஃபிகளைப் பற்றி மிகவும் சுவாரஸ்யமான சம்பவங்கள் உள்ளன, மேலும் சாதாரண நேசர்களைப் பற்றிய சுவாரஸ்யமான கதைகளை -யும் நீங்கள் காணலாம். அவர்களுக்கு மிகவும் பிடித்தமானது எது என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியாது. ஒரு கணம் அவர்கள் ஒரு விஷயத்தைப் பற்றியும், அடுத்த கணம் இன்னொன்றைப் பற்றியும், அதன் பிறகு இன்னொரு விஷயத்தைப் பற்றியும் சிந்திக்கிறார்கள், இறுதியாக அதை வழங்குகிறார்கள்.

மொகலாய மன்னர் பாபர் (தனது மகன்) ஹுமாயூனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அல்லாஹ்வுக்கு தனது மிக விலையுயர்ந்த பொருளைக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்த போது, அவர் ஹுமாயூனைச் சுற்றி நடக்கத் தொடங்கினார். அவர் தனது மிக விலையுயர்ந்த வைரத்தை காணிக்கையாகக் கொடுக்க நினைத்தார். பின்னர், “வைரம் சிறப்பு வாய்ந்தது அல்ல, நான் என் ராஜ்யத்தை மிகவும் நேசிக்கிறேன், நான் என் முழு ராஜ்யத்தையும கொடுக்க வேண்டும்” என்று நினைத்தார். அவர் தொடர்ந்து யோசித்தார்.

பின்னர் அவர் நினைத்தார் அல்லது ஒருவேளை அவரது மனசாட்சி அவரிடம், தனது உயிர் அவருக்கு மிகவும் பிரியமானது என்று கூறியிருக்கலாம். அந்த நேரத்தில் அவர் தனது உயிரைக் கொடுக்க முடிவு செய்து பிரார்த்தனை செய்தார் அல்லாஹ், நான் மிகவும் நேசிக்கும் விஷயம் என் உயிர் என்பதை உணர்ந்தேன். அல்லாஹ்! என் உயிரை எடுத்துக் கொள்வாயாக, ஆனால் என் மகனின் உயிரைக் காப்பாற்றுவாயாக.” வரலாற்றில் இந்த சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது

அன்றிலிருந்து, ஹுமாயூனின் உடல்நிலை மேம்படத் தொடங்கியது மற்றும் அவரின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியது.

இதனால், மக்கள் எதை அதிகமாக நேசிக்கிறார்கள். எதை குறைவாக நேசிக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்)

இந்த வக்ஃப் அவசரமான தேவையாகும். அடுத்த நூறு ஆண்டுகளில் இஸ்லாம் பரவலாகப் பரவும். மேலும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைவனுக்கு அடியார்களாக இருக்க வேண்டிய இலட்சக்கணக்கான பயிற்சி பெற்ற அடியார்கள் நமக்குத் தேவைப்படுவர். சமூகத்தின் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும், ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஏராளமான வாழ்வை அர்ப்பணித்தவர்கள் நமக்குத் தேவை. கடந்த காலங்களில் நாங்கள் வக்ஃபுக்காக வலியுறுத்தி வருகிறோம். நாங்கள் கடுமையாக முயற்சித்தோம், ஆனால் சில வகுப்பினர் பொதுவாக வாழ்வை அர்ப்பணிப்பதிலிருந்து தங்களை விலக்கிக் கொண்டதாகக் கருதினர்.

அவர்கள் வேண்டுமென்றே தம்மிடம் இருந்த அனைத்தையும் - தனது தூக்கம், விழிப்பு, உட்காருதல் மற்றும் நிற்கும் நேரத்தை - தியாகம் செய்தார்கள். உண்மை என்ன -வென்றால், மனிதன் தன்னிடம் உள்ள அனைத்தையும் நேசிக்கிறான். தனக்கு மிகவும் பிடித்தமான ஒன்றை வழங்கும்போது, தனக்காக குறைந்தபட்சம் ஏதாவது ஒன்றையாவது வைத்திருந்த திருப்தி அவருக்குக் கிடைக்கிறது. அவர் அதை விட குறைவான அன்பான ஒன்றைக் கொடுக்கும்போது, அவர் கையில் இன்னும் ஏதோ இருக்கிறது, மேலும் தன்னிடம் எஞ்சியிருப்பது அவருக்கு மிகவும் பிரியமானதாகிறது. ஒரு தாயின் மிகவும் பிரியமான குழந்தை இறந்து விட்டால், உயிர் வாழும் குழந்தை அவளுடைய மிகவும் பிரியமான ஒன்றாக மாறும். இந்த நிகழ்வு மனித இயல்பின் அனைத்து அம்சங்களிலும் தெளிவாகத் தெரிகிறது.

அவர்கள் பேரம் பேசவில்லை, அல்லாஹ், எனக்கு மிகவும் விலைமதிப்பற்றதை நான் உனக்கு வழங்கினேன். அது என் வாழ்க்கையாகும். எனவே மீதமுள்ளது என்னுடையது. அதற்கு பதிலாக, அல்லாஹ் அவருக்கு கட்டளையிடுகிறான்:

قُلْ اِنَّ صَلَاتِىْ وَنُسُكِىْ وَمَحْيَاىَ وَمَمَاتِىْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۙ

(சூரா அல் அன்ஆம் வசனம் 163)

“முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இந்த அடியார் -களுக்கு எப்படி அன்பு காட்ட வேண்டும் என்று கற்றுக் கொடுங்கள், ஏனென்றால் அவர்கள் உங்கள் அடிமைகளாகி விட்டார்கள், ஆனால் என்னை எப்படி அன்பு செய்வது என்று தெரியவில்லை. அவர்களுக்கு அன்பின் இரகசியங்களைக் கற்றுக் கொடுங்கள்.” அல்லாஹ் அவ்வாறு கட்டளையிடாமல் இருந்திருந்தால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது அன்பின் மறைக்கப்பட்ட இரகசியங்களை யாரிடமும் சொல்லியிருக்க மாட்டார்கள். இந்த அற்புதமான மற்றும் அழகான அம்சத்தை நான் உணர்ந்தபோது, அது உடனடியாக என் இதயத்தைக் கவர்ந்தது. சில சமயங்களில் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கட்டளையிட்டு, தனது இரகசியங்களை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்தும் பொறுப்பை அவர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறு செய்திருக்கா விட்டால், மக்கள் ஒருபோதும் உணர்ந்திருக்க மாட்டார்கள். தமது அழகை மறைத்து வைத்திருக்க விரும்பிய இந்த உயர்ந்த நபி (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகாக இருந்தார்கள், ஆனால் மிகவும் அடக்கமானவர். தமது குறைபாடுகளை மறைக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை

اِذْ قَالَتِ امْرَاَتُ عِمْرٰنَ رَبِّ اِنِّىْ نَذَرْتُ لَكَ مَا فِىْ بَطْنِىْ مُحَرَّرًا فَتَقَبَّلْ
مِنِّىْ ۚ اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ

(சூரா ஆல இம்ரான் வசனம் 36)

“என் இறைவனே! என் வயிற்றில் இருப்பதை உனது சேவைக்காக அர்ப்பணிக்க நான் நேர்ந்துள்ளேன்...” அது பெண்ணா அல்லது ஆணா, நல்லதா அல்லது கெட்டதா என்று எனக்குத் தெரியாது. அது எதுவாக இருந்தாலும், நான் அதை உனக்கே காணிக்கையாகக் கொடுக்கிறேன். ஃபதக்கப்பல் மின்னீ, அதை என்னிடமிருந்து ஏற்றுக்கொள். இன்னக அன்த ஸமீயுல் அலீம் (நீ நன்கு கேட்பவனும் மற்றும் எல்லாம் அறிந்தவன்). அதாவது, நீ கேட்கின்றாய், நீ அறிகின்றாய். இது ஒரு தனி தலைப்பாகும், அதன் விவரங்களுக்கு நாம் செல்ல வேண்டிய அவசியமில்லை. இம்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் மர்யமின் தாய் இந்த துஆவைச் செய்தார்கள்.



அல்லாஹ் இந்தப் பிரார்த்தனையை மிகவும் விரும்பினான். எதிர்கால சந்ததியினருக்காக அதைப் புனித குர்ஆனில் பாதுகாத்து வைத்தான். இதேபோல், ஹஸ்ரத் இப்ராஹீம் தம் குழந்தைகளுக்காகவும், மற்ற இறைத் தூதர்கள் தங்கள் குழந்தைகளுக்காகவும் செய்த பிரார்த்தனைகள் திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன. சில பிரார்த்தனைகளில், (வக்ஃப்) அர்ப்பணிப்புக்கான நோக்கம் தெளிவாகக் கூறப்படவில்லை, ஏனெனில் அது இங்கே உள்ளது: “முஹர்ரரன் - அல்லாஹ் நான் இந்தக் குழந்தையை உனது நோக்கத்திற்காக அர்ப்பணிக்கிறேன்.” ஆனால் பெரும்பாலும் நீங்கள் இந்த பிரார்த்தனையைக் காண்பீர்கள்:

“அல்லாஹ், என் குழந்தைகளுக்கு நீ எனக்கு அருளிய அருளை வழங்குவாயாக. இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த முறையில் பிரார்த்தனை செய்தது போல் இந்த வெகுமதியை அவர்களுக்கு வழங்குவாயாக. இந்த பிரார்த்தனையைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்தால், கேட்கப்படும் வெகுமதி உண்மையில் முழுமையான அர்ப்பணிப்பு என்பதை நீங்கள் உணர்வீர்கள். முழுமையான அர்ப்பணிப்பு இல்லாமல் எந்த நபித்துவமும் இல்லை. எல்லா மனிதர்களிலும், ஓர் இறைத் தூதர் அவர் அல்லாஹ்விற்கு மிகவும் அர்ப்பணிப்பு உள்ளவராக இருந்தார். ஆனால் இவ்வுலக ஆசைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

உண்மை என்னவென்றால், “என் சந்ததியினருக்கு நபித்துவத்தை வழங்கு” என்று யாராவது பிரார்த்தனை செய்யும்போது, அவர் உண்மையில் என்னைப் போலவே, என் சந்ததியினரையும் தலைமுறை தலைமுறையாக உனக்கு அடிமையாக்கு என்று மன்றாடுகிறார். உனது அன்பு மற்றும் கீழ்ப்படிதலால் அவர்களைப் பிணைத்திடு. அவர்களிடம் எந்த சுதந்திரமும் எஞ்சியிருக்காதபடி அவர்களை முழுமையாகப் பிணைத்திடு. அவள் முஹர்ரருன். “நான் இந்தக் குழந்தையை உலகத்திலிருந்து விடுவித்து உனக்கு வழங்குகிறேன்.”

இது வக்.்.ப்-இன் உயர்ந்த அம்சமாகும். என் சந்ததியினர் எந்த வகையிலும் எந்த சுதந்திரத்தையும் தக்க வைத்துக் கொள்ளாதபடி அவர்களை உன் அடிமைகளாக பிணைத்திடு.

இந்த காணிக்கையின் மற்றொரு அம்சம் என்னவென்றால், அல்லாஹ்வின் பாதையில் அனைத்தையும் கொடுத்த பிறகு, இறைத்தூதர்கள் தங்களிடம் இல்லாததைக் கொடுக்க விரும்பினர். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரார்த்தனைகள் (சில்லாஹ்வின்போது - நாற்பது நாள் தனிமை) அதே விளைவைக் கொண்டிருந்தன. நாற்பது பகல்களும் நாற்பது இரவுகளும் அவர்கள் “அல்லாஹ் எனக்கு சந்ததியைக் கொடு. உனது அடியாராகவும், என்னிடமிருந்து உனக்குப் பரிசாகவும் இருக்கும் சந்ததியை எனக்குக் கொடு” என்று கெஞ்சி மன்றாடினார்கள்.

அடுத்த நூற்றாண்டை வரவேற்க மிகவும்அருளுக்குரிய ஒரு திட்டம்:

அடுத்த நூற்றாண்டுக்கு முன்னர் நமது ஆன்மீக சந்ததியை பெருக்க முயற்சிக்கும்போது, அல்லாஹ்வின் பாதையில் நமது இன்னும் பிறக்காத குழந்தைகளை வாகி.்.பீன்களாக வழங்க வேண்டும் என்பதை முழு ஜமாஅத்தும் கருத்தில் கொள்ள வேண்டும். இப்போதே அல்லாஹ்வே! எங்களுக்கு ஒரு மகனைக் கொடு, ஆனால் நீ எங்களுக்கு ஒரு மகளைக் கொடுக்க விதித்திருந்தால், எங்கள் மகளை நாங்கள் உனக்காக அர்ப்பணிக்கிறோம். மா .்.பீபதனி - என் வயிற்றில் உள்ள அனைத்தும். இது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் வார்த்தைகளில் தாய்மார்கள் மற்றும் தந்தையர்களின் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்: “அல்லாஹ்வே! எங்கள் சந்ததியினர் உனக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்படுவதற்காக உனது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களில் ஒருவராக இருக்கட்டுமாக.” இந்த உலகத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கும் வாகி.்.பீன் குழந்தைகளின் ஒரு அற்புதமான படை, அடுத்த நூற்றாண்டில் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைவனின் அடிமைகளாக நுழைய வேண்டும். நாம் சிறு குழந்தைகளை அல்லாஹ்வுக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டும்.

இந்த வக்.்.ப் அவசரமான தேவையாகும். அடுத்த நூறு ஆண்டுகளில் இஸ்லாம் விரிவாகப் பரவும். மேலும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைவனுக்கு அடியார்களாக இருக்க வேண்டிய இலட்சக்கணக்கான பயிற்சி பெற்ற அடியார்கள் நமக்குத் தேவைப்படுவர். சமூகத்தின் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும், ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஏராளமான வாழ்வை அர்ப்பணித்தவர்கள் நமக்குத் தேவை. கடந்த காலங்களில் நாங்கள் வக்.்.புக்காக வலியுறுத்தி வருகிறோம். நாங்கள் கடுமையாக முயற்சித்தோம், ஆனால் சில வகுப்பினர் பொதுவாக வாழ்வை அர்ப்பணிப்பதிலிருந்து தங்களை விலக்கிக் கொண்டதாகக் கருதினர்.

ஜமாஅத்துக்கு வழங்கப்பட்ட வாகி.்.பீன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் வரவில்லை. சில பணக்காரர்கள் தங்கள் குழந்தைகளை வழங்கினர். ஆனால் பெரும்பாலும், உலகத்தின் பார்வையில் உயர் மதிப்பைப் பெறாத சமூகத்தின் அந்த வகுப்பிலிருந்து, அதாவது, கீழ்வகுப்பைச் சேர்ந்த ஏழை மக்களிடமிருந்து குழந்தைகள் வழங்கப்பட்டனர். இந்த சமூக அடுக்கிலிருந்து வரும் வாகி.்.பீன்கள் அதன் காரணமாக மரியாதையை இழப்பதில்லை. மாறாக, அது அவர்களின் மரியாதையை அதிகரிக்கிறது. ஆனால், வாகி.்.பீன்கள் மற்ற பிரிவுகளிலிருந்து வருவதில்லை என்பது நிச்சயமாக வராத அவர்களின் மதிப்பைக் குறைத்து விட்டது.

உலகில் மரியாதைக்குரியவர்களாகத் தோன்றும் மக்கள் தங்கள் குழந்தைகளை வக்.்.புக்காக அர்ப்பணிக்கக் கற்றுக் கொள்ளா விட்டால், அல்லாஹ்வின் பார்வையில் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்வார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அற்புதமான பணிவு, அழுகை, கண்ணீர் மற்றும் பிரார்த்தனைகளுடன் தங்கள் குழந்தைகளை இறைவனுக்கு அர்ப்பணித்த இறைத் தூதர்களின் குழந்தைகளை விட எந்தக் குழந்தையும் மரியாதைக்குரியது அல்ல என்பதை அவர்கள் உறுதியாக அறிந்து கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான வாகி.்.பீன்கள் வர வேண்டும்: அடுத்த நூற்றாண்டில் வாழ்வை அர்ப்பணித்தவர்களின் கடுமையான தேவை இருக்கும். அடுத்த நூற்றாண்டில் ஜமாஅத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான வாழ்வை அர்ப்பணித்தவர்களை அல்லாஹ்வுக்கு அன்பளிப்பாக வழங்க உள்ளோம். அடுத்த நூற்றாண்டின் மக்கள் தான் எங்கள் அன்பளிப்பால் பயனடைவார்கள். எனவே, உண்மையில், அடுத்த நூற்றாண்டின் (மக்களுக்கு) இந்த அன்பளிப்பை நாங்கள் வழங்குகிறோம். எனவே, இந்த அன்பளிப்பை யார் வழங்க முடியுமோ அவர்கள் அதைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

அவர்களின் அருளுக்குரிய நோக்கம் மற்றும் வாக்குறுதியின் காரணமாக, குழந்தைகள் இல்லாத குடும்பங்களுக்கும், ஏதோ ஒரு காரணத்தால் குழந்தைகளைப் பெற முடியாத கணவர்கள் அல்லது மனைவிகளுக்கும் அல்லாஹ் குழந்தைகளை வழங்கக்கூடும். அல்லாஹ் அவர்களின் தியாக உணர்வை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு சந்ததியினரை ஆசீர்வதிக்கலாம். அல்லாஹ் கடந்த காலங்களில் அவ்வாறு செய்திருக்கிறான். வக்.்.புக்காக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள பிரார்த்தனை செய்து கேட்ட இறைத்தூதர்கள், வயதான காலத்திலும், கணவன் மனைவி இருவரும் குழந்தைகளைப் பெற முடியாத நிலையிலும் கூட குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். ஹஸ்ரத் ஜக்கரியாவைப் பாருங்கள்!

என்ன ஓர் அற்புதமான பிரார்த்தனை அது! “அல்லாஹ், நான் வயதாகி விட்டேன். என் தலை நரைத்து மின்னுகிறது. என் எலும்புகள் முதுமையால் பலவீனமாக உள்ளன. என் மனைவி மலடி. அவள் குழந்தையைப் பெற இயலாதவள். ஆனால் நான் ஒரு குழந்தையை உனக்காக அர்ப்பணிக்க விரும்புகிறேன். தயவுசெய்து என் விருப்பத்தை நிறைவேற்று...” இது ஒரு உலக மனிதனுக்கும் இறைவனின் அடியானுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு. ஒரு உலக நபர் தனது தவறுகளை மறைத்து, தனது சிறிய அழகைப் பற்றி பெருமை பேசுகிறார். அதைப் போற்றுகிறார். அதைக் காட்டுகிறார். சுய

விளம்பரம் அவரது வாழ்க்கையின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கும்.

### முழுமையான அர்ப்பணிப்பும் அதன் வெகுமதியும்:

அல்லாஹ் தனது அடியார்களுக்கு மட்டுமே தெரிந்த சில குணங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதை அல்லாஹ் கடமையாக்கினான். ஏனெனில் அந்தக் குணங்கள் அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரிந்திருந்தன. இதனால் அவர்கள் அல்லாஹ்வின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அல்லாஹ்வை அடையக் கற்றுக் கொள்ள முடியும். இந்தக் குணங்களில் ஒன்று, தன்னிடம் உள்ள அனைத்தையும் அர்ப்பணிப்பதாகும். தீர்க்கதரிசிகள் வேறு என்ன அர்ப்பணிக்க வேண்டும் என்று யோசித்து, தங்கள் குழந்தைகளை அர்ப்பணிப்பது வழக்கம். சில சமயங்களில், அவர்கள் தங்கள் குழந்தைகளை அவர்கள் பிறப்பதற்கு முன்பே அர்ப்பணிக்கிறார்கள். இது புனிதர்களின் பாரம்பரியமாகவும் இருந்து வருகிறது. உதாரணமாக, ஹஸ்ரத் ஸகரிய்யா (அலை) அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள்:

وَّلَمۡ اَكُنۡۢ بِدُعَآئِكَ رَبِّ شَقِيًّا

(சூரா மர்யம் வசனம் 5)

என் இறைவனே! இதற்காக நான் பிரார்த்தனை செய்யும்போது ஒருபோதும் விரக்தியடைந்ததில்லை. உன்னிடம் நான் செய்யும் பிரார்த்தனையில் நான் ஒருபோதும் பாக்கியம் பெறாமலில்லை. 'ஷக்கியா' என்ற வார்த்தை வியக்கத்தக்க வகையில் விளக்குகிறது. இதன் பொருள், அல்லாஹ், நான் உன்னிடம் பிரார்த்தனைசெய்து, பின்னர் விரக்தியடைந்து, பிரார்த்தனை செய்வதைத் தவிர்க்கும் துரதிர்ஷ்டவசமானவன் அல்ல என்பதாகும்.

பிரார்த்தனை மிகவும் பெரியதாகவும், மிகவும் உற்சாகமாகவும் இருந்தது. அவர் இன்னும் தொழுது கொண்டிருக்கும்போதே, அல்லாஹ் அவருக்கு யஹ்யாவின் மகிழ்ச்சியான செய்தியைக் கொடுத்தான். அல்லாஹ்வே அந்தக் குழந்தைக்குப் பெயரிட்டான். இது மாட்சிமை பொருந்திய இறைவனின் அன்பைப் பிரதிபலிக்கிறது. புனித குர்ஆன் ஒருஅற்புதமான நூலாகும்! ஒருவரின் அன்பை வெளிப்படுத்தும் அழகான வழிகளைக் கற்றுக் கொடுக்கிறது. இதனால் மனிதன் அதைக் கண்டு வியப்படைகிறான். உங்களுக்கு ஒரு குழந்தை இருக்கும்போது, உங்கள் குழந்தைக்கு யாரிடம் பெயரிட வேண்டும் என்று நீங்கள் யோசிக்கிறீர்கள். ஒவ்வொரு அஹ்மதியும் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் கலீஃபாவை நேசிப்பதுபோல, ஏராளமான மக்கள் எனக்கு எழுதுகிறார்கள். எனவே, ஹஸ்ரத் ஸக்கரியா கேட்கும் முன், 'நான் அவருக்கு என்ன பெயர் வைக்க வேண்டும்?' அல்லது அல்லாஹ் சொன்ன மகிழ்ச்சியான செய்தியுடன், குழந்தைக்குப் பெயரிடுவது பற்றி யோசித்தீர்களா?

اسۡمُهٗ يَحۡيٰى

(சூரா மர்யம் வசனம் 8)

நான் அவருக்கு யஹ்யா என்று பெயரிடுகிறேன். இது ஹஸ்ரத் ஸகரிய்யா (அலை) அவர்கள் மீதுள்ள அன்பினால் உண்டானது.

### அடுத்த நூற்றாண்டில் அல்லாஹ்வுக்கு வழங்கப்பட வேண்டிய பரிசு:

இவ்வாறு, வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் அந்த பரிசுகளில் ஒன்றாவர். அடுத்த நூற்றாண்டில் நீங்கள் அல்லாஹ்வுக்கு பல பரிசுகளை வழங்குவீர்கள் அல்லது

**உலகில் மரியாதைக்குரியவர்களாகத் தோன்றும் மக்கள் தங்கள் குழந்தைகளை வக்ஃபுக்காக அர்ப்பணிக்கக் கற்றுக் கொள்ளா விட்டால், அல்லாஹ்வின் பார்வையில் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்வார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அற்புதமான பணிவு, அழுகை, கண்ணீர் மற்றும் பிரார்த்தனை -களுடன் தங்கள் குழந்தைகளை இறைவனுக்கு அர்ப்பணித்த இறைத் தூதர்களின் குழந்தைகளை விட எந்தக் குழந்தையும் மரியாதைக்குரியது அல்ல என்பதை அவர்கள் உறுதியாக அறிந்து கொள்ள வேண்டும்.**

**ஜமாஅத்தின் அனைத்து பிரிவுகளில் இருந்தும் இலட்சக்கணக்கான வாகிஃபீன்கள் வர வேண்டும்: அடுத்த நூற்றாண்டில் வாழ்வை அர்ப்பணித்தவர்களின் கடுமையான தேவை இருக்கும். அடுத்த நூற்றாண்டில் ஜமாஅத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான வாழ்வை அர்ப்பணித்தவர் -களை அல்லாஹ்வுக்கு அன்பளிப்பாக வழங்க உள்ளோம். அடுத்த நூற்றாண்டின் மக்கள் தான் எங்கள் அன்பளிப்பால் பயனடைவார்கள். எனவே, உண்மையில், அடுத்த நூற்றாண்டின் (மக்களுக்கு) இந்த அன்பளிப்பை நாங்கள் வழங்குகிறோம். எனவே, இந்த அன்பளிப்பை யார் வழங்க முடியுமோ அவர்கள் அதைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.**

நீங்கள் தற்போது வழங்கும் பரிசுகள். அஹ்மதிகள் பல வகையான சந்தாக்களின் பணம் பங்களிக்கிறது. (நன்கொடைகள்) அவர்கள் பொருள் தியாகங்கள் செய்கிறார்கள் மற்றும் அவர்கள் தங்கள் நேரத்தை தியாகம் செய்கிறார்கள். வாழ்வை அர்ப்பணிப்பவர்களின் இந்த பரிசு எதிர்காலத்திற்கானது.

அல்லாஹ் இந்த விஷயத்தில் என் கவனத்தைத் திருப்பினான், இதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அல்லாஹ்வுக்கு வக்ஃபுக்காகக் கொடுக்கப்படுவார்கள் என்று நீங்கள் என்னிடம் வாக்குறுதி செய்ய வேண்டும்.

இந்தத் திட்டத்தில் இதற்கு முன்பு பங்கேற்க முடியாத கர்ப்பிணித் தாய்மார்கள் இப்போது இதில் பங்கேற்கலாம். அவர்களும் வாக்குறுதி செய்யலாம். ஆனால் இந்த வாக்குறுதியைப் பெற்றோர்களின் இருவரும் செய்ய வேண்டும்.

இந்தக் குழந்தைகளின் வளர்ப்பிலும் கல்வியிலும் ஒற்றுமை இருக்க, அவர்கள் இதை ஒன்றாக முடிவு செய்ய வேண்டும். மேலும் அவர்கள் அவர்களது குழந்தைப் பருவத்திலிருந்தே சிறந்த முறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்க வேண்டும். இஸ்லாத்தின் வெற்றியின் முதல் நூற்றாண்டு இஸ்லாத்தின் வெற்றியின் இரண்டாம் நூற்றாண்டுடன் இணையும் ஒரு சிறந்த நேரத்தில், அவர்கள் ஒரு சிறந்த நோக்கத்திற்காகப் பிறந்தார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் வளர வேண்டும். அவர்கள் இந்தச் சந்திப்பில் பிறந்தார்கள். எதிர்காலத் தலைமுறையினரைப் பயிற்றுவிப்பதற்காக அந்தக் குழந்தை ஒரு சிறந்த முஜாஹித் (போராளி) ஆக வேண்டும் என்ற நோக்கத்துடனும் பிரார்த்தனையுடனும் தங்கள் பெற்றோர் அல்லாஹ்விடம் ஒரு குழந்தையைக் கேட்டதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். மக்கள் இந்த முறையில் தங்கள் குழந்தைகளை பிரார்த்திக்கும்போது அர்ப்பணித்தால், அல்லாஹ்வின் பாதையில் தன்னைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் ஒரு அழகான மற்றும் அன்பான தலைமுறை நம் கண்களுக்கு முன்பாகவே இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அல்லாஹ் இதை அடைய நமக்கு உதவுவானாக. ஆமீன்!

## ஹதீகத்துல் மஹ்தி



ஹேம்ப்ஷயரில் உள்ள ஹதீகத்துல் மஹ்தி 2005—ல் விலைக்கு வாங்கப்பட்ட 208 ஏக்கர் பரப்பு கொண்ட ஒரு பண்ணை நிலமாகும். இதுவே தற்போது ஜல்ஸா நடைபெறும் இடமுமாகும். ஒவ்வோர் ஆண்டும் வெறும் 28 நாட்களில் இந்தப் பண்ணை நிலம் ஒரு பிரமாண்டமான கூடார நகரமாக மாறி விடுகிறது. ஆண்டுக்கு ஆண்டு அரங்குகளின் அளவும் சரி, ஆயிரக்கணக்கான விருந்தினர்களை கவனித்துக் கொள்ளும் தற்காலிகக் கட்டமைப்புகளும் சரி, மேலும் மேலும் பொலிவு பெற்று வருகின்றது. ஹதீகத்துல் மஹ்தி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத் தன்மைக்கு மற்றுமொரு மகத்தான சான்றாகும்.

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam